Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா  செய்தி: 021 493 0000  விளம்பரம்: 021 493 1111

சுடர் :35  கதிர் :185  வைகாசி 19ஆம் நாள் திங்கட்கிழமை  01 ஜூன் 2020  வள்ளுவர் ஆண்டு 2051

கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்



16

முகம், கண், வாய், மூக்கு என்பவற்றை அடிக்கடி தொடுவதைத் தவிர்ப்போம்.

தகவல்: வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம்

## முல்லையில் இருவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூன் 1

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து நேற்றுப் பரிசோதனைக்கு உட்பட்டவர்களில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

45 பேருக்கான பரிசோதனைகள் யாழ் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்டன. அவர்களில் 41 பேர் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களில் இருவருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)



## ஆறுமுகனின் உடல் தீயில் நேற்று சங்கமம்

கொழும்பு, ஜூன் 1

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் நேற்று மாலை தீயுடன் சங்கமமானது.

இறுதிக் கிரியைகள் நடைபெற்ற நோர்வூட் மைதானத்துக்கு 300 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்ததால் மைதானத்துக்கு வெளியில் இருந்தும், சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைக்காட்சி ஊடாகவும் தமது தலைவரின் இறுதிப் பய

02

## கொரோனா 1,633 குணமடைவு 801

கொழும்பு, ஜூன் 1

இலங்கையில்கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 13 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு

02

# அரச சொத்தை முறைகேடாக பயன்படுத்திய அங்கஜன்

### நடவடிக்கை எடுக்காத தேர்தல்கள் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருந்த போது, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனுக்கு வழங்கப்பட்டிருந்த அரச வாகனத்தை ஒப்படைக்குமாறு அறிவுறுத்தியும் இரண்டு மாதங்களாக அவர் ஒப்படைக்கவில்லை. இரண்டு மாதங்களாக அதனை முறைகேடாக அங்கஜன் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறானதொரு நிலையில் உடனடியாக வாகனத்தை ஒப்படைக்குமாறு நினைவூட்டல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

02



## 650 இந்தியர்கள் இன்று பயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடக்கு கிழக்கில் தங்கியிருந்த இந்தியர்கள் அனைவரும் கொழும்பில் இருந்து இந்தியாவுக்கு இன்று கப்பல் மூலம் புறப்படுகின்றனர். இந்தியாவில் இருந்து கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கப்பலில் 650 பேர் பயணிக்கும் வசதி உள்ளது. இதையடுத்து 650 பேர் இன்று இந்

02

## பொலிஸார் எனக்கூறி இளம்பெண் கடத்தல்

*மந்துவிலில் நள்ளிரவில் பரபரப்பு*

கொடிகாமம், ஜூன் 1

பொலிஸார் எனத் தம்மை அடையாளப்படுத்திய குழுவினர், வீடு புகுந்து இளம்பெண் ஒருவரைக் கடத்திச் சென்று, சில மணி நேரத்தில் மீண்டும் வீட்டுக்கு அருகாமையில் 300 மீற்றர் தூரத்தில் விட்டுச்

02

## ராஜபக்ஷ அணிக்கு தேர்தலில் தக்க பாடம்!

### சஜித் தலைமையில் புதிய ஆட்சி உறுதி அடித்துக் கூறுகின்றார் சுஜீவ சேனசிங்க

கொழும்பு, ஜூன் 1

ராஜபக்ஷ அணியினருக்குப் பொதுத் தேர்தலில் மக்கள் உரிய பதிலளிப்பார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸ தலைமை

02

## 3 காரணிகளைக் கொண்டே தேர்தல் திகதி நிர்ணயம்!

*தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 1

பொதுத்தேர்தல் தொடர்பில் தாக்கல்செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான பின்னரே பொதுத்தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கமுடியும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

02

## வெட்டுக்கிளிகள் இலங்கையிலும்!

### கொரோனாவைத் தொடர்ந்து மற்றொரு பேராபத்து நிலை

கொழும்பு, ஜூன் 1

உலக அளவில் கொரோனா அச்சுறுத்தலைத் தொடர்ந்து வெட்டுக்கிளிகளும் பெரும்

02



## ராஜபக்ஷ...

யில் புதிய ஆட்சியை அமைத்தே தீருவோம் எனவும் அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அமைச்சர் பந்துல குணவர்த்தன காலத்துக்குக் காலம் ஏதாவது கருத்தைத் தெரிவித்து பலர் மத்தியில் பெரும் விமர்சனங்களுக்குள்ளாகி வருபவர். அதற்கேற்றாற்போல் தற்போது கொரோனா வைரஸ் நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேச விளையாட்டு அரங்கை அமைக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். அவர் ராஜபக்சக்களுடன் மிகவும் சூட்சுமமாகப் பேசி தனது திட்டத்தை செயற்படுத்த முயற்சிப்பவர்.

தாமரை மொட்டைக் காண்பித்து ராஜபக்சக்களைத் தன்வசப்படுத்திக் கொள்வார். ஆனால், இம்முறை கிரிக்கெட் வீரர் மகேல ஜயவர்தனவின் விளக்கத்தால் நாட்டு மக்கள் அனைவரும் இது தொடர்பில் தெளிவுற்றுள்ளனர். இதற்கு நாம் மகேலவுக்கே நன்றி செலுத்த வேண்டும். நாட்டில் பல சர்வதேச விளையாட்டரங்குகள் காணப்படுகின்றன. அவற்றை மேலும் அபிவிருத்தி செய்வதை விடுத்து புதிதாக ஒரு விளையாட்டு அரங்கை அமைப்பது என்பது இலகுவான செயற்பாடு கிடையாது.

இந்தநிலையில் இதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில், தொடர்ந்தும் விளையாட்டரங்கை அமைப்பதற்கு முயற்சிப்பது தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது. இதற்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்கள் பந்துலவுக்குப் பதில் அளிப்பார்கள். ஹோமாகம மக்கள் மாத்திரமல்ல கொழும்பு மக்களும் அவருக்கு உரிய பாடத்தைக் கற்பிப்பார்கள். அவருக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த ராஜபக்ச அணிக்கும் பொதுத் தேர்தலில் மக்கள் உரிய பதிலளிப்பார்கள். சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய ஆட்சியை அமைத்தே தீருவோம்' - என்றார். (ம-22)

## கொரோனா...

தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 1,633ஆக அதிகரித்துள்ளது. நேற்று அடையாளம் காணப்பட்ட புதிய தொற்றாளர்களில் ரஷ்யாவிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்ட 7 பேர் அடங்குகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 801 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். 10 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-22)

## ஆறுமுகனின்...

ணத்தை கண்ணுற்ற இ.தொ.கா தொண்டர்களும் விழிநீர் வடித்தனர். இதனால் மலையகம் சோகமயமானது.

மாரடைப்பால் கடந்த 26ஆம் திகதி காலமான அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுல் இரண்டு நாட்களாக கொழும்பில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட நிலையில் அதன்பின்னர் மலையகத்துக்கு எடுத்துசெல்லப்பட்டது. வேவண்டன் பங்களாவில் வைத்து இந்துமுறைப்படி சடங்குகள் முடிவடைந்த பின்னர் கொட்டகலை தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு பூதவுடல் எடுத்து செல்லப்பட்டது.

கொட்டகலை சி.எல்.எப் வளாகத்தில் வைத்து சர்வமதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு இரு நாட்களாக அஞ்சலி செலுத்தினர். இவ்விரண்டு நாட்களும் நுவரெலியா மாவட்டத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்தனர். பொதுச் சுகாதார அதிகாரிகளும் கடமைகளில் ஈடுபட்டனர். புலனாய்வாளர்களும் சேவைக்கு அமர்த்தப்பட்டனர். ஊரடங்கு உத்தரவால் பொலிஸாரின் அனுமதி பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் திருப்பியனுப்பட்டனர்.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள அனைத்து நகரங்களிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. நேற்று பிற்பகல் 2 மணியளவில் கொட்டகலையில் இருந்து நோர்வூட் மைதானத்தை நோக்கி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் எடுத்துவரப்பட்டது.

நோர்வூட் மைதானத்தைச் சூழ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தொற்று நீக்கி தெளிக்கப்பட்டு சூழல் சுத்தப்படுத்தப்பட்டிருந்தது. சர்வமதத் தலைவர்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அமைச்சரவையின் உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட மேலும் சில அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இறுதிக்கிரியைகள் பூரண அரச மரியாதையுடன் இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வரவேற்புரை நிகழ்த்தினார். அதன்பின்னர் சர்வமதத் தலைவர்களின் உரைகள் இடம்பெற்றன.

சர்வமத தலைவர்களின் உரைகள் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் அனுதாபச் செய்தி மும்மொழிகளிலும் வாசிக்கப்பட்டது. ஜனாதிபதியின் அனுதாபச் செய்தி, மத்திய மாகாண ஆளுநரால் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வர் ஜீவன் தொண்டமானிடம் கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிகளின் சார்பில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும், நுவரெலியா மாவட்டத்திலுள்ள எதிர்க்கட்சிகளின் சார்பில் நவீன் திஸாநாயக்கவும், பொதுஜன பெரமுன உட்பட ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சியின் சார்பில் மஹிந்தானந்த அளுத்தமகேயும் இரங்கல் உரை ஆற்றினர். ஆறுமுகன் தொண்டமானின் குடும்பத்தின் சார்பில் ஜீவன் தொண்டமான் நன்றியுரை ஆற்றினார். இவ்வாறு இரங்கல் உரைகள் முடிவடைந்த பின்னர் அரச மரியாதையுடன் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. (ம-44)

## அரச...

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அங்கஜன் இராமநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் அவருக்கு டபிள்யூ பி கே பி 9101 என்ற இலக்கத்தையுடைய வாகனம் வழங்கப்பட்டிருந்தது. நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பதவி வெறிதானது. இந்த நிலையில் அவர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அங்கஜன் பயன்படுத்திய அலுவலகத்தை மூடுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பணித்தது. அது நடைபெறாத நிலையில் மார்ச் மாதம் 13ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களத்தினரால் குறித்த அலுவலகம் இழுத்து மூடப்பட்டது. இந்த நிலையில் ஒருங்கிணைப்புத் தலைவர் என்பதற்காக அரசால் வழங்கப்பட்ட வாகனத்தை மீள ஒப்படைக்குமாறு மார்ச் மாதம் 3ஆம் திகதி அங்கஜனுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஆனாலும் அங்கஜன் வாகனத்தை ஒப்படைக்காமல் இரண்டு மாதங்களாகச் சொந்தத் தேவைகளுக்காகப் பயன்படுத்தியுள்ளார். அதனை ஒப்படைக்குமாறு கோரியே நினைவூட்டல் கடிதம் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## பொலிஸார்...

சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் மந்துவில் வடக்கு முத்துமாரியம்மன் கோவிலடியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு நடந்துள்ளது. பெண்ணின் தந்தை கைகள் கட்டப்பட்ட நிலையில் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சம்பந்தப்பட்டவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

அதன் அடிப்படையில் நள்ளிரவு வீடு புகுந்து பெண்ணைக் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பெண் சட்ட மருத்துவ அதிகாரியின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார். ஏனையோரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக பெண்ணின் தந்தை தெரிவித்ததாவது,

10 பேர் கொண்ட கும்பல் ஒன்று வாள்கள், கத்திகள், பொல்லுகள் சகிதம் வீட்டுக்குள் புகுந்தனர். நீங்கள் யார் என்று கேட்ட போது, பதில் பேசவில்லை. நான் உடனே கைபேசி மூலம் பொலிஸாருக்கு அழைப்பை ஏற்படுத்த முற்பட்ட போது, தாம் பொலிஸார் என்றும் விசாரணைக்காக வந்ததாகவும் தெரிவித்தனர். பின்னர் அத்துமீறி வீட்டுக்குள் நுழைய முற்பட்டபோது நான் அதனைத் தடுத்தேன். என்னைக் கட்டிப் போட்டு அடித்து விட்டு வீட்டுக்குள் நித்திரையாக இருந்த எனது மகளைக் கடத்திச் சென்றனர். தடுக்க வந்த அயலவர் இருவருக்கும் தாங்கள் பொலிஸ் மற்றும் இராணுவம் என மிரட்டி அவர்களையும் தாக்கினர் என்றார்.

சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-159)

## வெட்டுக்கிளிகள்...

பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. இந்தியாவின் வடமாநிலத்தில் அவதானிக்கப்பட்ட வெட்டுக்கிளிகள் இலங்கையில் குருநாகல் மாவட்டத்திலும் கண்டறியப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

'குருநாகல் மாவத்தகம பகுதியில் வெட்டுக்கிளிகளின் அச்சுறுத்தலால் பயிர்கள் சேதமடைந்துள்ளன. சோளம், வாழை, கொய்யா மற்றும் மா உள்ளிட்டவை சேதமடைந்துள்ளன. கடந்த 3 தினங்களுள் அதிகளவான வெட்டுக்கிளிகள் பரவியுள்ளன' என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி வீரக்கோன் அந்தப் பகுதியைச் சென்று பார்வையிட்டுள்ளார். கிருமிநாசினியைப் பயன்படுத்தி வெட்டுக்கிளிகளை அழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆபிரிக்கக் கண்டத்தில் உணவுப் பஞ்சத்தை ஏற்படுத்திய பாலைவன வெட்டுக்கிளிகள் இந்தியாவின் வடமாநிலங்களில் அண்மைக் காலமாக கடும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. ஒரு சொட்டு தானியத்தையும் விட்டு வைக்காமல் அவை அழித்துள்ளன. இவை தற்போது இலங்கையிலும் தமது கைவரிசை காட்டத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ஒ.5)

## 650...

தியா திரும்புகின்றனர்.

தூத்துக்குடி துறைமுகத்திற்கு பயணிப்பதனால் அதிகமானோர் தமிழர்களே பயணிக்கும் நிலையில் வடக்கில் தங்கியிருந்த 224 இந்தியர்களும் கிழக்கு மாகாணத்தில் தங்கியிருந்த 195 பேரும் உள்ளடங்கலாகவே இன்று பயணிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-105)

## 3 காரணி...

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான பின்னரே, தேர்தலை எப்போது நடத்த முடியும் என்பதை எவ்வித தயக்கமும் இன்றி தெளிவாகக் குறிப்பிடமுடியும். அதேபோல் தேர்தல் திகதியை நிர்ணயிப்பதற்கு எமக்கு மேலும் மூன்று விடயங்களும் தேவைப்படுகின்றன.

சுகாதார தரப்பின் பரிந்துரை,

தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு நீதியாகவும், சுதந்திரமாகவும் எவ்வித அச்சமும் இன்றி தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பகட்ட ஏற்பாடுகளை செய்வதற்காக தேவைப்படும் கால எல்லை,

அரசியல்வாதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பல தரப்பினருக்கும் தேர்தல் குறித்த தமது பணிகளை எவ்வித தடையுமின்றி செய்வதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கவேண்டும் ஆகிய மூன்று விடயங்களையும் அடிப்படையாகக்கொண்டே தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்படும்.

அதேபோல் இதுவரையில் நாம் எந்தவொரு வேட்பாளருக்கும் விருப்பு இலக்கங்களை வழங்கவில்லை. தேர்தலை விரைவில் நடத்துமாறு அழுத்தங்கள் வரவில்லை. அவ்வாறு செய்யுமாறு கோரிக்கையே விடுக்கப்படுகின்றது. தேர்தல் ஆணைக்குழுவுக்குள் பெரும் கருத்து முரண்பாடுகள் எதுவும் கிடையாது- என்றார்.

(எ-44)

# தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 1

நாட்டில் தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழை நிலைமை படிப்படியாக உருவாகி வருகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பில் அந்த திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது;

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில்சில இடங்களில் 50 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் பல இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும். புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து ஹம்பாந்தோட்டை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக்காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப் போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது (மணித்தியாலத்துக்கு 70-80 கிலோ மீற்றர் வரையும்) பலமான காற்று வீசுவது டன் அக் கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்றுள்ளது. (ப)

# 63, 935 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களை அடையாளம் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் பீ.சி.ஆர். பரிசோதனைகள் நாட்டில் இதுவரை 63 ஆயிரத்து 935 வரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்மட்டும் ஆயித்து 727 பீ.சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதற்குக் காரணம் என்ன?

## திடுக்கிடும் தகவல்களுடன் காணொலி

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும்,ஜனாதிபதி ஆணைக்குழுவின் குற்றப்புலானாய்வுப் பிரிவின் உயர் அதிகாரியொருவர் கடந்த வெள்ளிக்கிழமை சாட்சியம் அளித்தார். தாக்குதல் நடத்துவதற்கு என்ன காரணம் என்பதை உள்ளடக்கிய காணொலி ஒன்றையும் அவர் ஆணைக்குழுவில் ஒப்படைத்தார்.**

சஹ்ரான் ஹசீம் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முந்தைய நாள் கல்கிஸ்ஸ பகுதியில் பதிவுசெய்த காணொலி ஒன்றில் தாக்குதலுக்கான காரணங்களைத் தெரியப்படுத்தியுள்ளார். கடந்த 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி ஜமில் மொஹமட் என்பவரிடம் பயங்கரவாத ஒழிப்பு விசாரணைப் பிரிவு விசாரணை நடத்தி அது குறித்து அப்போதைய பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு தெரியப்படுத்தப் பட்டது. எனினும் 2019 ஏப்ரல் 8 ஆம் திகதி பூஜித் ஜயசுந்தர கையெழுத்திட்டு அனுப்பிய ஆவணத்தில் ஜமீல் மொஹமட் என்பவர் ஒரு தீவிரவாத வெறியர் என்பது தொடர்பில் எந்த தகவலும் பதிவாகவில்லை. ஜமீல் மொஹமட்டின் மனைவியை விசாரித்த போது, தாக்குதல் நடந்த தினத்தன்று காலையில் குண்டுதாரி தனது மொபைல் போனில் வாட்ஸ் அப்பிற்கு ஒரு டேப்பை அனுப்பியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. தாக்குதலுக்கு முந்தைய நாளில் இதுவரை ஊடகங்கள் ஒளிபரப்பாத காணொலிகள் சஹ்ரான் ஹசீம் நீண்ட உடையை அணிந்து தரையில் விழுந்தவாறு பதிவு செய்த வீடியோக்கள் பல கிடைக்கப் பெற்றுள்ளன.

அதில் தாக்குதல் நடத்த உயிர்த்த ஞாயிறு தினத்தை தெரிவு செய்தமைக்கான நான்கு காரணங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. அல்லாஹ்வால் அங்கீகரிக்கப்பட்ட செயல்களை நேசிக்கவும், தடைசெய்யப்பட்ட செயல்களை நிராகரிப்பதும் முன்னாள் ஐ.எஸ் தலைவர் உருவாக்கிய இஸ்லாமிய அரசின் மீது தாக்குதல் நடத்தி அங்கிருந்த முஸ்லிம்கள் கொல்லப்பட்டமைக்கு பழிவாக்குதல். நியூசிலாந்தில் ஒரு பள்ளியில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களைக் கொலை செய்தமை, ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள முஸ்லிம் மக்களைக் கொல்வதற்கு காரணமானவர்கள் இலங்கையில் சுற்றுலா மேற்கொண்டமை போன்ற காரணங்களால் இலங்கையில் உள்ள தேவாலயங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் தாக்கப்பட்டதாக சஹ்ரானின் வீடியோவில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை இலங்கையில் நடத்த காரணமானவைகள் குறித்தும் சஹ்ரான் தனது வீடியோ பதிவில் கூறியுள்ளதாக அவர் சாட்சியம் அளித்தார்.

அல்லாஹ் தெய்வத்தை ஏசுவது மற்றும் குறைத்து மதிப்பிடுதல், குளியாப்பிட்டியில் பன்றி உருவத்தில் அல்லாஹ்வை சித்தரித்தது, அல்லாஹ் மறுபிறவி எடுத்தான் என்று ஞானசர தேரர் கூறியமை, முகமது நபிக்கு எதிராகக் குற்றம் சுமத்தல், குரானைக் கிழித்து எரித்தமை, மஸ்ஜித் பள்ளிவாசல்களை இடித்தல், முஸ்லிம் களின் வீடுகளுக்குத் தீ வைத்து பொருளாதாரத்தை அழித்தமை சர்வதேச சிலுவைப் போரில் இலங்கையின் பங்கேற்பு, அல்லாஹ்வின் சட்டத்தின்படி இஸ்லாத்தை தழுவ மறுக்கும் நபர்களைக் கண்ட இடத்தில் கொல்வது என்பனவே அந்தக் காரணிகள்.

மேலும் இந்தத் தாக்குதல் முஸ்லிம்களின் பாதுகாப்புக்காகவும், அல்லாஹ்வை கௌரவபடுத்துவதற்காகவுமே நடத்தப்படுகிறது என்றும் அந்தக் காணொலியில் கூறப்பட்டுள்ளது.

அதன் பின்னர் ஆணைக்குழு வீடியோ பதிவு செய்யப்பட்ட இடம் குறித்து கவனம் செலுத்தியது. இந்தக் காணொலி தாக்குதல் நடத்த முன்னர் அதாவது ஏப்ரல் 20ஆம் திகதி பிற்பகல் 1 மணி முதல் 3 மணி வரையான நேரத்தில் கல்கிஸ்சையில் உள்ள கட்டடத்தில் பதிவு செய்யப்பட்டதாகவும் சாட்சியாளர் கூறினார். பின்னர் சஹ்ரான் ஹசீமிடம் இருந்த துப்பாக்கி குறித்து ஆணைக்குழு விசாரித்தது. அது ரி-56 ரக துப்பாக்கி எனவும், 2017 ஆம் ஆண்டு முதல் பயிற்சிகளுக்காக அதனை சஹ்ரான் பாவித்துள்ளதாகவும் ஆனால் அந்த ஆயுதத்தை சரியாகத் தம்மால் அடையாளம் காண முடியவில்லை எனவும் சாட்சியாளர் ஆணைக்குழுவில் கூறினார். (ப)



# வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலையில் சிரமதானம்

மன்னார், ஜூன் 1

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை, வட்டக்கண்டல் சுடரொளி விளையாட்டுக்கழகத்தினரால் நேற்றுத் துப்புரவு செய்யப்பட்டது

கொரோனா வைரஸ் தாக்கத்தால் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக பாடசாலை மூடப்பட்டிருந்தது.

தற்போது சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு அரசு ஆலோசனை செய்து வருகிறது. அதற்குத் தயார்ப்படுத்தும் முகமாக வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை துப்புரவு செய்யப்பட்டது. (க-213)

# ஐ.ம.சவில் இணையும் உறுப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது

## சஜித் ஆணித்தரம்

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து செயற்படும் எந்தவொரு உறுப்பினருக்கு எதிராகவும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது அதன் தலைமைத்துவத்துக்கோ எவ்வித உரிமையும் கிடையாது என்று தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் போலியான பிரசாரங்களுக்கும் யாரும் ஏமாற வேண்டாம் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து செயற்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களது அங்கத்துவம் இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் விசேட அறிவித்தல் மூலம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சியின் ஸ்தாபகர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்களாவர். எனவே, நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன், ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படும் எந்தவொரு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் யாருக்கும் கிடையாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தற்போது செயற்குழுத் தீர்மானங்களை எடுப்பதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றனர். அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் தீர்மானங்களுக்கு ஏற்பவே செயற்படுகின்றமையால் எம்முடன் இணைந்து செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது அர்த்தமற்றது. சட்ட ரீதியாக இதனை நிரூபிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். எம்முடன் இணைந்து செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அவர்களைப் பாதுகாப்பதற்காக தனிநபராக களமிறங்குவேன் என்று உறுதியளிக்கின்றேன் - என்றார். (ப)

# ஊரடங்கு முழுமையாக நீக்கப்படும் சாத்தியம்

## கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 1

**நாடளாவிய ரீதியாக அமுல்படுத்தப்பட்டு வரும் ஊரடங்கை முழுமையாக நீக்குவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

நாடு முழுவதும் நேற்று ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு இன்று திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணிவரை மாத்திரமே அமுலில் இருக்கும்.

அதேபோன்று, எதிர்வரும் ஜுன் 04 மற்றும் பொசன் நோன்மதி தினமான 05 ஆம் திகதிகளிலும் மீண்டும் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. இதற்கமைவாக ஜுன் 03 ஆம் திகதி இரவு 10.00 மணிக்கு அமுலுக்குவரும் ஊரடங்கு 06 ஆம் திகதி அதிகாலை 4.00 மணிவரை அமுலில் இருக்கும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்திருக்கிறது.

இன்று முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 03 ஆம் திகதி புதன்கிழமை வரை வழமைபோன்று தினமும் இரவு 10 மணி தொடக்கம் அதிகாலை 04 மணி வரை ஊரடங்கு அமுல்படுத்தப்படும். நேற்று நாடு முழுவதும் ஊரடங்குஅமுல்படுத்தப்படுவதனால் அனைத்து மாவட்டங்களிலும் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய போக்குவரத்து நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை நாடளாவிய ரீதியாக அமுல்படுத்தப்பட்டு வரும் ஊரடங்கை முழுமையாக நீக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது. வரும் நாள்களில் சமூகத்தில் கொரோனாத் தொற்று ஏற்படாமல் இருந்தால் இந்த முடிவை நடைமுறைப்படுத்த அரச உயர்பீடம் எண்ணியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்படி எதிர்வரும் பொசன் தினத்திற்குப் பின்னர் பெரும்பாலும் ஊரடங்கு முழுமையாகத் தளர்த்தப்படலாம் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ப)

# பழுதடைந்த பாண் விற்பனை

வவுனியா, ஜுன் 1

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தில் பழுதடைந்த பாண் விற்பனை செய்யப்பட்டுள்ளது. குறித்த வர்த்தகருடன் நுகர்வோர் ஒருவர் முரண்பட்டுள்ளார்.

இன்று கொண்டு வரப்பட்ட புதிய பாண் உள்ளதா என வர்த்தகரிடம் நுகர்வோர் கேட்ட போது அவரும் 'ஆம்' என தெரிவித்து தன் வசம் வைத்திருந்த பாணை விற்பனை செய்துள்ளார்.



அதனைப் பெற்றுக்கொண்ட நுகர்வோர் வீட்டுக்குக் கொண்டு சென்று பார்த்த போது அது பழுதடைந்திருந்தது.

இதனையடுத்து குறித்த வர்த்தக நிலையத்துக்கு மீண்டும் வந்த அவர் வர்த்தகரிடம் பாண் பழுதடைந்துள்ளது தொடர்பாக கேட்டுள்ளார்.

வர்த்தக நிலையத்துக்கு பாண் வழங்கும் வெதுப்பகத்தினருடன் நுகர்வோர் தொடர்பு கொண்டு கேட்டபோது இன்றைய தினம் வர்த்தக நிலையங்களுக்கு பாண் விநியோகிக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகரிடம் குறித்த விடயம் தொடர்பாக நுகர்வோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-110)

# குவைத்திலிருந்து திரும்பியோரின் தொடர்பால் சிப்பாய்க்கு தொற்று

கொழும்பு, ஜுன் 1

குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தமையே இராணுவச் சிப்பாய்க்கு கொரோனாத் தொற்று ஏற்படக் காரணம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையாற்றியதுடன், அங்கிருந்து வந்தவர்களுக்கு இந்த இராணுவச் சிப்பாய் உதவிகளை மேற்கொண்டுள்ளார். அதன் பின்னர் இராணுவச் சிப்பாய் கடந்த 26 ஆம் திகதி விடுமுறையில் ஹொரணையில் உள்ள வீட்டிற்குச் சென்றுள்ளார்.

தற்போது கொரோனாத் தொற்று உறுதியானதையடுத்து அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஹொரன நகரில் 4 வர்த்தக நிலையங்களில் பணியாற்றிய 26 பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, குவைத்திலிருந்து திரும்பிய இலங்கையர்களில் பெரும்பாலானோர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். (எ)

# 220 கடற்படையினருக்கும் கொரோனாத் தொற்று இல்லை

கொழும்பு, ஜுன் 1

கொழும்பு, கோட்டை கபூர் கட்டடத் தொகுதியிலிருந்த 220 கடற்படையினருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத்தில் இருந்த கடற்படை வீரர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, கட்டடத்தில் இருந்த சுமார் 220 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை நேற்றுமுன்தினம் வெளியானது. அதில் எவருக்கும் கொரோனாத் தொற்றில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

# வழிகாட்டுதல்களை பின்பற்றாது அமைச்சர்களின் இறுதிச் சடங்கு

## ஆபத்து என்கிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜுன் 1

சுகாதார அமைச்சு புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளபோதும் முக்கிய அமைச்சர்களின் இறுதிச் சடங்குகள் இடம்பெறும் பகுதிகளில் வழிகாட்டுதல்களை பின்பற்ற தவறுவதால் ஆபத்துக்கள் உருவாகலாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இறுதிச் சடங்கில் பெருமளவு மக்கள் கலந்துகொள்வதால் நாடு முழுவதுக்கும் ஏற்படக்கூடிய ஆபத்து குறித்து பிராந்திய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது நாட்டில் கடற்படையினருக்கும் வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு அழைத்து வரப்படுபவர்கள் மத்தியிலும் மாத்திரமே கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்படுவதாக சங்கம் தெரிவித்துள்ளது. எனினும் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்காவிட்டால் கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாம் கட்ட ஆபத்து உருவாகலாம் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இதேவேளை தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை மீறிய மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிச் சடங்கு ஏற்பாடுகள் குறித்தும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கவலையையும் அதிருப்தியையும் வெளியிட்டுள்ளது. (ப)

# தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம்

வவுனியா கருவேப்பங்குளம் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டது.

குறித்த இளைஞனை நீண்ட நேரம் காணாத நிலையில் அவரது பெற்றோர் தேடியுள்ளனர்.

இளைஞன் வீட்டின் முன்பாக உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கியநிலையில் இருப்பதை அவதானித்தனர்.

உடனடியாக அவரை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர். ஏற்கனவே அவர் சாவடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கருவேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த சீவரத்தினம் நிலான் (வயது -18) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணை முன்னெடுத்தனர். (க-110)

# வழிகாட்டலை தயாரிக்குமாறு கல்வி அமைச்சு ஆலோசனை

கொழும்பு, ஜுன் 1

இலங்கையில் கொரோனாவினால் தடைப்பட்டிருந்த கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பித்த தன் பின்னர் பின்பற்ற வேண்டிய தகுந்த வழிகாட்டலைத் தயாரிக்குமாறு கல்வி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

இது தொடர்பிலான ஆலோசனைகள் அடங்கிய சுற்றறிக்கை மாகாண மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் எம்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, சுகாதார நிலைமை மற்றும் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கமைய குறித்த வழிகாட்டலை தயாரிப்பது அவசியமாகும். மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்போது, உயர்தர மற்றும் சாதாரண தர மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் சித்ரானந்த குறிப்பிட்டுள்ளார். (ப)

தொண்டமானின்

# இறுதிக் கோரிக்கையை அரசு நிறைவேற்றுமா?

மன்னார், ஜுன் 1

காலம்சென்ற அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதி வேண்டுகோளை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மலையக தமிழ் மக்களுக்காக தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்தவர். அவரது இறுதிக் கடமைகளை நிறைவேற்றியுள்ள இத்தருணத்தில் மலையக மக்களின் வாழ்வாதார மேம்படுத்தல் அடிப்படையில் ஆறுமுகன்தொண்டமான், இறுதிக் சந்திப்பில் அரச தலைவர்களிடம் வைத்த முக்கிய வேண்டுகோள் மலையக தமிழ் மக்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு விவகாரம். இதனை அரசு உடனடியாக வழங்குவதில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவே இன்றைய அரசு காலஞ்சென்றஆறுமுகன்தொண்டமானுக்கு செய்கின்ற மரியாதையாகும். என்றுள்ளது. (க-60)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சரியும் அமெரிக்கா!

உலகின் மிகப்பழமையான ஜனநாயக நாடு என்றும், ஜனநாயகத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் என்றும், இராணுவ பலத்திலும் பொருளாதாரத்திலும் தன்னிகரற்ற நாடு என்றும் தனக்குத்தானே முடிசூடிக்கொண்ட அமெரிக்கா, தன் நிலையில் இருந்து படிப்படியாக வீழ்ந்து வருகின்றது. கொரோனா வைரஸ் எதிர்பாராத சம்மட்டி அடியைக் கொடுத்த பின்னர், தற்போது கறுப்பினத்தவர்களின் கலவரம் அமெரிக்காவை நிலைகுலைய வைத்துள்ளது.

ஜோர்ஜ் பிளொய்ட் என்ற கறுப்பினத்தவரின் இறப்பே கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியிலும் அமெரிக்காவை கலவர பூமியாக மாற்றிவிட்டுள்ளது. குறித்த கறுப்பினத்தவரின் கழுத்தில் அமெரிக்கப் பொலிஸ் அதிகாரி தனது முழங்காலால் 8 நிமிடங்களுக்கும் மேலாக அழுத்தி நெரிக்கும் காணொலி கடந்த வியாழக்கிழமை வைரலானது. அதன் பின்னர் சில நிமிடங்களில் அந்தக் கறுப்பினத்தவர் இறந்துவிட ஒட்டுமொத்த கறுப்பினத்தவர்களையும் ஈர இதயம்கொண்ட வெள்ளையர்களையும் அவரது சாவு தட்டி எழுப்பியுள்ளது.

நியூயோர்க், வொஷிங்டன், பென்சில்வேனியா, லொஸ்ஏஞ்சல்ஸ் உள்ளடங்கலாக சுமார் 20 பகுதிகளில் கலவரம் உச்சம் பெற்றுள்ளது. அந்த நகரங்களில் முழுமையான இறுக்கமான ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டாலும் கறுப்பினத்தின் எழுச்சியை கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்களின் போராட்டம், நீண்டு – பலம்பெற்று – கட்டுக்குள் அடங்காததாகச் செல்கின்றது.

உலக வல்லரசாக இறுமாப்புடன் தன்னிகரற்ற பொருளாதாரச் சக்திகொண்டு வலம்வந்த அமெரிக்காவை கொரோனா வைரஸ் அதலபாதாளத்துக்குள் தள்ளிவிட்டுள்ளது. அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பின்னுக்குத்தள்ளி சீனா அந்த இடத்தைக் கைப்பற்றும் நிலையில் உள்ளது. பல கோடி பில்லியன்களை அமெரிக்கா இந்தக் கொரோனாவால் பறிகொடுத்துள்ளது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சாவுகள், 18 லட்சம் பாதிப்புக்கள் என்று மிரண்டு நிற்கின்றது அமெரிக்கா. இது இன்னும் பல்கிப் பெருகலாம். ஒவ்வொரு நாளும் 20 ஆயிரத்துக்கும் குறையாத கொரோனா நோயாளர்கள் அமெரிக்காவில் அவதானிக்கப்படுகின்றனர். இதனால் அங்கு நிலைமை சீராவதற்கு இன்னும் சில மாதங்கள் ஆகலாம். அதற்குள் அமெரிக்கா பொருளாதாரத்தில் நான்காம் நிலைக்குக்கூடத் தள்ளப்பட்டாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இவ்வாறிருக்க கறுப்பினத்தவரின் இந்தக் கலவரம் நிச்சயம் அமெரிக்காவுக்கு பெரும் தலைவலியே.

கறுப்பினத்தவர்களின் விவகாரம் என்பது அன்றுமுதல் இன்று வரை அமெரிக்காவில் ஆறாத வடுவே. நீறுபூத்த நெருப்பாக உள்ள இந்த விவகாரம் எப்போது வேண்டுமானாலும் பூதாகரமாகலாம். கறுப்பினத்தவரின் கால் பட்டுவிட்டது என்பதற்காக நீச்சல் குளத்தின் ஒட்டுமொத்த தண்ணீரைத் திறந்துவிட்ட சம்பவங்களும், கறுப்பினத்தவர் ஏறிவிட்டார் என்பதற்காக பேருந்துகளுக்குத் தீ வைத்த சம்பவங்களும்கூட அமெரிக்காவில் தாராளம். 2016ஆம் ஆண்டுகூட கிரட்சர் என்ற கறுப்பினத்தவர் பொலிஸாரின் அடக்குமுறையில் கொல்லப்பட்டார். தற்போது ஜோர்ஜ் புளொய்டின் மறைவு இந்த அனைத்து அசம்பாவிதங்களையும் மீண்டும் தூசு தட்டியிருக்கின்றது. புத்துயிர் கொடுத்திருக்கின்றது.

இரண்டு விடயங்கள் மட்டும் உண்மை. ஒன்று, அமெரிக்கா தன் நிலையில் இருந்து படிப்படியாகப் பின்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இரண்டாவது, 'மேக் அமெரிக்கா கிரேட் எகெய்ன்' என்ற கோசத்துடன் ஆட்சியைப் பிடித்த அதிபர் ட்ரம்பின் பயணமும் நிறைவை நோக்கி நகர்கின்றது.

# தேர்தல் ஆணைக்குழுவிடம் உடன் விசாரணை நடத்தவும்

## அரசமைப்பு பேரவையிடம் கோரிக்கை



கொழும்பு,ஜூன் 1

**நாட்டுக்கு எதிராகச் செயற்படும் அரசசார்பற்ற அமைப்புகளின் கிளை அலுவலகமாக தேர்தல் ஆணைக்குழு மாறிவிட்டதா என்ற சந்தேகம் எழுகின்றது. அவ்வாணைக்குழுவின் உயர்மட்ட உறுப்பினர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனமொன்றின் அனுசரணையுடன் கருத்தரங்கு வைக்கப்பட்டுள்ளது. எனவே, இதன் பின்னணி தொடர்பில் ஆராய்வதற்கு அரசமைப்பு பேரவை உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்.**

இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இது குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடு பக்கச்சார்பாக இடம்பெறுகின்றது. சுயாதீனத்தன்மை முற்றாக இல்லாது செய்யப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவிலுள்ள பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் போன்றோர், அரச சார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து தேர்தல் நடவடிக்கையை அரசுக்கு எதிரான வகையில் முன்னெடுப்பதற்கு முயற்சித்து வருகின்றனர். இது தொடர்பில் பல தரப்பினரும் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் கடந்த 27, 28 ஆம் திகதிகளில் பேருவளையிலுள்ள ஹோட்டலொன்றில் தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் உட்பட உயர்மட்ட அதிகாரிகள் 50 பேர் வரையானோருக்கு விசேட கருத்தரங்கொன்று நடத்தப்பட்டுள்ளது. இதற்கான அனுசரணையை அரசசார்பற்ற அமைப்பொன்றே வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலொன்று நடைபெறவுள்ள நிலையில், அரசசார்பற்ற அமைபொன்றின் முழுமையான நிதி அனுசரணையுடன் அவசரமாக எதற்காக கருத்தரங்கு நடத்தப்பட்டது. கருத்தரங்கு நடத்தப்படவேண்டுமெனில் அதற்கு அரச நிதியைப் பயன்படுத்த முடியாதா?, தேர்தலை நடத்துவதற்கு மூன்று மடங்கு நிதியை தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் கோரியுள்ளார். அப்படியானால் அந்த நிதியில் இதற்கான செலவை ஈடுசெய்திருக்க முடியாதா? இவ்வாறான வினாக்களுடன், தேர்தல் ஆணைக்குழுவின் இந்தச் செயற்பாடு குறித்து எமக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பொதுத்தேர்தல் சுயாதீனமாக நடத்தப்படுமா என்ற அச்சமும் உருவாகியுள்ளது.

எனவே, மே 27, 28 ஆம் திகதி நடத்தப்பட்டுள்ள கருத்தரங்கு என்ன, இதில் பங்கேற்ற அரச அதிகாரிகள் யார், அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் யார், அனுசரணையை வழங்கிய அமைப்பு எது, கருத்தரங்கில் பேசப்பட்ட விடயங்கள் எவை? என்பன தொடர்பில் கண்டறிவதற்காக முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையிலான அரசமைப்பு பேரவை உடனடியாக பரந்துபட்ட விசாரணையை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு நடத்தப்பட்டு சுயாதீனமாகத் தேர்தல் நடைபெறுவது உறுதிப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசசார்பற்ற அமைப்புகளின் கிளை அலுவலகமாகத் தேர்தல் ஆணைக்குழு மாறிவிடும்- என்றார். (க-44)



## ஊடகவியலாளர் நடேசனின் 16வது நினைவு தின நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூன் 1

மட்டக்களப்பில் வைத்து கடந்த 2004ஆம் ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சிரேஸ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 16 வது நினைவு தின நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்லடி வொய்ஸ் ஒஃப் மீடியா ஊடக கற்கைகள் நிறுவகத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் தேவ அதிரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு தீபச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து அன்னாரது ஆத்மா சாந்திக்காக மௌன அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது. நிகழ்வானது சுகாதார முறைகளுக்கு ஏற்றாற்போல் நடத்தப்பட்டதுடன், ஊடகவியலாளர் சங்கத்தின் சிரேஸ்ட ஊடகவியலாளர்கள் உட்பட ஊடகவியலாளர்கள் சிலரும் கலந்துகொண்டனர். (ப)

*வற்றாப்பளையில்*

## தீர்த்தம் எடுக்கும் நிகழ்வுக்கு 30 பேருக்கு மட்டுமே அனுமதி

முல்லைத்தீவு, ஜூன் 1

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் நிகழ்வுக்காகத் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டவர்களைத் தவிர ஏனையவர்கள் பங்குபற்ற அனுமதியில்லை.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் ஆண்டுப் பொங்கல் நிகழ்வை முன்னிட்டு நடைபெறும் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை நடைபெறவுள்ளது

அம்மனின் புனித கங்கரியமான தீர்த்தம் எடுக்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்கு சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக 30 பேருக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக சுகாதார விதிகளுக்கு அமைவாக பொங்கல் நிகழ்வுக்கான புனித கருமத்தை ஆற்றவேண்டியுள்ளது.

எனவே இந்த புனிதயாத்திரையில் அனுமதி அட்டை வழங்கப்பட்ட 30 பேரைத் தவிர ஏனைய எவரும் கலந்துகொள்ள அனுமதி இல்லை. தீர்த்தக் குடம் திரும்பிவரும் போது தேங்காய் உடைப்பவர்கள் ஒரு தேங்காயை உடைத்து வழிபாடு செய்யலாம். இதன்போது தனிநபர் இடைவெளியைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். என்றனர். (க-19)

# விசேட அதிரடிப்படையின் பங்கு மிகவும் அளப்பரியது

## கமல் குணரத்ன பாராட்டு



கொழும்பு, ஜூன் 1

**தீவிரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான செயற்பாட்டில் விசேட அதிரடிப்படையின் பங்கு அளப்பரியதாகும் என பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.**

விசேட அதிரடிப்படை தலைமையகத்திற்கான பயணத்தை மேற்கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகளை வெற்றிகரமாக முறியடித்த தன்மூலம் அவர்கள் தமது ஆளுமைகளை நிரூபித்துள்ளனர்.

இலங்கைப் பொலிஸாரின் விசேட படைப்பிரிவாக மிளிரும் விசேட அதிரடிப்படையினர், ஒரு சட்ட அமுலாக்க அதிகாரியாக மட்டுமல்லாமல் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிராக போராடுவதிலும் பயிற்சி பெற்ற ஒரு சக்தியாக உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# வீதிகளைச் சீரமைப்பதற்கு சிறப்புக் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 1

கிளிநொச்சி வட்டக்கச்சி இராமநாதபுரம் கிராமத்திலுள்ள அழகரத்தினம் வீதி, வட்டக்கச்சி இராமநாதபுரம் பிரதான வீதி போன்ற வீதிகளைச் சீரமைப்பதற்கான விசேட சந்திப்பும் கள ஆய்வும் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திட்டத்துக்கான பணிப்பாளர் தலைமையில் வீதி அபிவிருத்தி திணைக்களப் பொறியியலாளர்கள் மற்றும் மாகா நிறுவன அதிகாரிகள் கிராம அலுவலர்கள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், அபிவிருத்தி அலுவலர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மக்களைச் சந்தித்து அண்மையில் கலந்துரையாடினர்.

இதன்போது அபிவிருத்தியின்போது விசேடமாக கவனம் செலுத்தவேண்டிய வேலைகள் பற்றி அந்த இடங்களைப் பார்வையிடும் நோக்குடன் அந்த இடங்களுக்குச் சென்று விவரங்கள் சேகரிக்கப்பட்டன. வட்டக்கச்சி புழுதியாறு குறுக்கறுத்துச் செல்லும் நாவலடிப் பகுதியை விசேட ஆய்வுக்கு உட்படுத்தி திட்டத்தை மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)



# சங்கானை சந்தை புதன்கிழமை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

சங்கானை மரக்கறிச் சந்தை நாளைமறுதினம் புதன்கிழமை ஆரம்பிப்பதற்கு தேவையான சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பிரதேச சபை தவிசாளர், சுகாதார பிரிவினர் நேற்றுமுந்தினம் ஆராய்ந்தனர்.

முகக் கவசம் அணிவது கட்டாயம் என்றும் தனியாள் இடைவெளியைப் பேணும் வகையில் வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

கொரோனா அச்சநிலையின் பின்னர் யாழ்ப்பாணத்தில் சகல சந்தைகளும் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-7)

# ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 1

ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொஹுவலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எஸ்.டீ.பீ. ஜயசிங்க மாவத்தையில் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினர் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போதே இவர் கைது செய்யப்பட்டார்.

பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார் அவரிடமிருந்து 154 கிராம் 220 மில்லி கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஹுவலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# விவசாய நிலங்களில் உள்ள அரண்களை அகற்றத்திட்டம்

## வவுனியா கமநலசேவைகள் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 1

விவசாய நிலங்களில் போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண்கள் இருக்கும் பட்சத்தில் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளதாவது,

போர்க்காலத்தில் பல பாதுகாப்பு அரண்கள் விவசாய நிலங்களில் அமைக்கப்பட்டன. பல அரச நிறுவனங்கள் கடந்த காலத்தில் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுத்திருந்தன. வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களம் அவற்றை வவுனியா மாவட்டத்தில் அகற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் 24 மில்லியன் ரூபா நிதியில் கிட்டத்தட்ட 45 கி.மீ நீளமுள்ள பல பாதுகாப்பு அரண்கள் இரண்டு கட்டங்களாக மீள்குடியேற்ற அமைச்சின் நிதியின் கீழ் மாவட்டச் செயலகத்தின் ஆதரவுடன் அகற்றப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் மூன்றாம் கட்டமாக 2020இல் வவுனியா மாவட்டத்தில் 15 கி.மீ நீளமான பாதுகாப்பு அரண்கள் சமூக அபிவிருத்தி அமைச்சின் 8.4 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாவட்டச் செயலகத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலகங்களின் ஆதரவோடு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் அகற்றும் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் வவுனியா மாவட்டத்துக்கு 2015 ஆம் ஆண்டிலும் பாதுகாப்பு அரண்களை அகற்ற கமக்காரர் நம்பிக்கை நிதியத்தால் 7.5 மில்லியன் நிதி வழங்கப்பட்டு வேலை முடிவுறுத்தப்பட்டது. இந்த நிலையில் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது, வவுனியாவில் மேலும் சில பாதுகாப்பு அரண்கள் அடையாளம் காணப்படாமல் அல்லது நில உரிமையாளர்கள் இல்லாத காரணத்தால் கோரிக்கை விடப்படாமல் உள்ளமை கண்டறியப்பட்டது. எனவே யாருடைய நிலத்திலாவது இன்னும் பாதுகாப்பு அரண்கள் இருந்தால், விவரங்களைக் கடிதம் மூலமாக உங்கள் பிரதேச கமநல சேவைகள் நிலையம் அல்லது மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பான மேலதிக தகவலுக்கு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரை 0242225511/ 0778317 443 இலக்கங்களில் தொடர்பு கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-110)

# வெடிபொருளுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 1

வெல்லம்பிட்டிப் பகுதியில் துப்பாக்கி மற்றும் வெடிபொருள்களுடன் இருவர் வெல்லம்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய பொலிஸாருக்கு சனிக்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே கொலன்னாவையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்கள், கடந்த மாதம் 25 ஆம் திகதி கொலன்னாவைப் பகுதி வீடு ஒன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியமை மற்றும் ஒருவரைக் கொலை செய்வதற்காக திட்டமிட்டமை தொடர்பில் தேடப்பட்டு வந்தவர்கள் என பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (ப)

# இரு குடும்பங்களுக்கு 35 கோழிகளும் தீவனமும்

முல்லைத்தீவு, ஜூன் 1

துணுக்காயில் உடல் பாதிப்புக்களை எதிர்கொண்ட சிறப்புத் தேவையுடைய இருவருக்கு கோழிகளும் அதற்கான தீவனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வட்டு. இந்து வாலிபர் சங்கத்தின் நிதியில் துணுக்காய் ஒளிரும் வாழ்வு அமைப்பு ஊடாக இவை வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு கால்களையும் இழந்து துணுக்காய் மங்கைகுடியிருப்பில் வாழும் முத்துலிங்கம் அமராவதிக்கும், ஒரு காலை இழந்து துணுக்காய் மல்லாவியில் வாழும் கந்தசாமி இந்துமதிக்கும் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இரு பயனாளிகளுக்கும் தலா 20ஆயிரம் ரூபா பெறுமதியில் 35 கோழிகளும் கோழித்தீவனமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (து)

# பழமுதிர்சோலை இன்று செயற்படும்

தென்மராட்சி பிரதேச பழ உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பழமுதிர்சோலை நிலையம் இன்று திங்கட்கிழமைதொடக்கம் மீள இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு நடைமுறையால் நிலையம் இயங்கவில்லை. நிலையத்துக்கு ஐந்து பேர் கொண்ட புதிய இயக்குநர் சபை யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளது. புதிய இயக்குநர் சபையின் ஏற்பாட்டில் நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பமாகவுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தில் மா,பலா போன்றவை அறுவடை காலம் என்பதால் உற்பத்தியாளர்களிடமிருந்து மாம்பழங்கள், பலாப்பழங்கள் கொள்வனவு செய்யவுள்ளனர். உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை நிலையத்தில் ஒப்படைக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. (க-9)

# ஜனாதிபதி சொன்னது வடக்கில் நடக்குமா?

## அவரிடமே கேட்கிறார் சத்தியலிங்கம்



யாழ்ப்பாணம், ஜூன் 1

**கொவிட் 19 காலத்தில் நாட்டிலுள்ள அனைத்து தரிசு நிலங்களையும் செய்கைக்கு உட்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கும் ஜனாதிபதி, வன்னித் தேர்தல் மாவட்டத்தில் மட்டும் 333 குளங்கள் வனவளத் திணைக்களத்தின் பிடியிலேயே இன்னும் உள்ளது என்பதை அறிவாரா? இதை அறிந்துதான் அப்படிக் கூறுகிறாரா?**

இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார், தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்டத் தலைவரும் நாடாளுமன்ற வேட்பாளருமான ப.சத்தியலிங்கம்.

உலகம் முழுவதும் பரவியுள்ள கொரோனாவுக்கு இலங்கையும் தப்பிக்கவில்லை. கொரோனாபாதிப்பு தொடர்வதால் எதிர்காலத்தில் பொருளாதாரப் பாதிப்பும் ஏற்படக் கூடும் என்ற நிலையில் நாட்டின் அனைத்து நிலத்தையும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி கருதுவது சரியான விடயம்தான். ஆனால் அத்தகைய நிலத்தில் பயிர்ச்செய்கை செய்யவிடாது மக்களை தடுத்து வைத்துக்கொண்டு படையினர் மூலமாகச் செய்யும் சதியே முல்லைத்தீவில் இடம்பெறுகின்றது. அதேநேரம் மன்னார், வவுனியாவிலும் அதிக குளங்களை வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளது.

### வடக்கில் மட்டும் அடாவடி நிலை

நாட்டில் காணப்படும் அனைத்து நடுத்தரக் குளங்களும் கமநலசேவைத் திணைக்களங்களின் ஆளுகையிலுள்ளன. எமது மண்ணில் மட்டும் அந்த குளங்களின் அருகே மக்களும் போகமுடியாது, கமநல சேவைத் திணைக்களமும் செல்ல முடியாத நிலைமையே இன்னும் காணப்படுகின்றது.

தற்போது வவுனியாவில் 780 குளங்களும் , மன்னார் மாவட்டத்தில் 368 குளங்களும் , முல்லைத்தீவில் 273 குளங்களும் என ஆயிரத்து 401 குளங்களும் காணப்படுகின்றன.

கமநல சேவைத் திணைக்களத்தின் ஆளுகையில் வவுனியா மாவட்டத்தில் 623 குளங்களும் , மன்னார் மாவட்டத்தில் 270 குளங்களும், முல்லைத்தீவில் 195 குளங்களுமாக ஆயிரத்து 88 குளங்கள் மட்டுமே கமநல சேவைத் திணைக்களத்திடம் உள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 157 குளங்களும், மன்னார் மாவட்டத்தில் 98 குளங்களும் முல்லைத்தீவில் 78 குளங்களுமாக மொத்தம் 333 குளங்கள் தற்போது வனவளத் திணைக்களத்தின் முற்றுகையில் அல்லது ஆக்கிரமிப்பில் உள்ளன.

இவ்வாறு வடக்கின் 3 மாவட்டங்களின் குளங்களுடன் குறித்த திணைக்களம் பல்லாயிரக்கணக்கான விவசாய நிலங்களையும் ஆக்கிரமித்துள்ளது. அதனடிப்படையில், மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 150 ஏக்கர் நிலம் வனவளத் திணைக்களத்தின் பிடிக்குள் சென்றுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் வனவளத் திணைக்களத்தின் வசமுள்ளது. இவ்வாறு ஆக்கிரமிப்பு ஒருபுறம். மறுபுறத்தில் குறித்த குளங்களின் கீழுள்ள விவசாய நிலங்களின் அபிவிருத்திக்கும் வனவளத் திணைக்களம் தடை விதிக்கின்றது.

நாட்டின் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்ற உண்மையான நல்லெண்ணம் கொண்ட ஜனாதிபதியாக இருப்பின் இந்த குளங்களையும் அதனோடு உள்ள விவசாய நிலங்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். செய்கை பண்ணப்படாத நிலங்களையும் விவசாய நடவடிக்கைக்கு உட்படுத்துவது தொடர்பில் தேசிய ரீதியிலும் மாவட்ட ரீதியாகவும் இரு முக்கிய கலந்துரையாடல்கள் நடைபெற்றபோதும், அதில் அதிகாரிகளே கலந்துகொண்டனர். மக்கள் பிரதிநிதிகள் இன்மையால் இவ்வாறான தகவல்கள் வெளிவரவில்லை. எனவே நாட்டின் உண்மையான அபிவிருத்திக்கு குறித்த குளங்களையும் நிலப்பரப்பையும் விடுவிக்க ஜனாதிபதி உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (த-105)



# ஓட்டோவைத் தாக்கி பதம்பார்த்த யானை

## இருவர் காயத்துடன் தப்பித்தனர்

வவுனியா, ஜூன் 1

வவுனியா அநுராதபுரம் எல்லை பூனாவை பகுதியில் யானையும் முச்சக்கரவண்டியும் மோதியதில் இரண்டு பேர் காயமடைந்து மதவாச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மதவாச்சி பகுதியிலிருந்து பூனாவை நோக்கி முச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்தபோது வீதியில் திடீரென்று யானை குறுக்கிட்டுள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி யானையுடன் மோதியுள்ளது. அதில் பயணித்த இருவரும் காயமடைந்தனரெனினும் அந்த இடத்திலிருந்து தப்பியோடினர். எனினும், யானை முச்சக்கரவண்டியை கடுமையாக தாக்கி சேதப்படுத்திவிட்டு சென்றுள்ளது. பூனாவை பகுதியை சேர்ந்தவர்களே காயமடைந்துள்ளனர். (த-110)

# உக்காத கழிவுகளை எடுக்கும் இடங்கள்

எழுதுமட்டுவாழ் பகுதியில் உக்காத கழிவுப் பொருள்கள் அகற்றப்படவுள்ளன. எனவே, வீடுகளிலுள்ள கழிவுகளை ஒன்றுசேர்க்குமாறு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

உங்கள் வீடுகளில் காணப்படும் நுளம்புப் பெருக்கத்துக்கு வாய்ப்பளிக்கக்கூடிய உக்காத கழிவுப்பொருள்களை உரப்பைகளில் இட்டு வாய்ப்பகுதியை இறுக்கமாகக் கட்டிய பின்னர் வைப்பதன் மூலம் எதிர்வரும் 5ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச சபையினர் அவற்றை வாகனத்தில் அகற்றிச் செல்வர். அதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.

கொடிகாமம் தெற்கு ஜே328 பிரிவில் குணம் கடையடி, வவா கடையடி, அம்பாள் ஸ்ரோர்ஸ் முன்றல் பகுதிகளிலும், உசன் ஜே 329 பிரிவில் கந்தசாமி கோவிலடி சந்தி (மைதானம் அருகில்), பாடசாலை சந்தி ஆகிய பகுதிகளிலும், கரம்பகம் ஜே330 பிரிவில் பொதுநோக்கு மண்டபம், கொற்பிட்டி சந்தி, சக்தி ஸ்டோர்ஸ், கரம்பகம் ஆகிய பகுதிகளிலும், விடத்தற்பளை ஜே331 பிரிவில் கிராம அபிவிருத்தி சங்க கட்டடம் , அன்ரனி வீதி, உசன் விடத்தற்பளை வீதி ஆகிய பகுதிகளிலும், கெற்பேலி ஜே332 பிரிவில் கெற்பேலி அ.த.க பாடசாலை அருகாமை, கெற்பேலி பொதுநோக்கு மண்டபம் ஆகிய பகுதிகளிலும், எழுதுமட்டுவாழ் தெற்கு ஜே333 பிரிவில் பொதுச்சந்தை, விழுவளை அம்மன் கோவிலடி, சிவன் கோவிலடி ஆகிய பகுதிகளிலும், எழுதுமட்டுவாழ் வடக்கு 334 கல்யாணக்குளம் சந்தி, மருதங்குளம் சந்தி, ஓட்டுவெளி நாச்சிமார் கோவிலடி பகுதிகளிலும், மிருசுவில் வடக்கு 335 அரசடி பிள்ளையார் கோவிலடி, வன்னியர் சனசமூக நிலையம், மன்னாங்குறிச்சி கோவிலடி ஆகிய பகுதிகளிலும், மிருசுவில் தெற்கு 336 நேயம் சனசமூக நிலையம், ஆயத்தடி பிள்ளையார் கோவிலடி, பழைய வாய்க்கால், வீரபத்திரர் கோவிலடி ஆகிய பகுதிகளில் உக்காத கழிவுப்பொருள்களை அகற்றுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இடங்களில் உக்காத கழிவுப் பொருள்களை உரப்பைகளில் இட்டு வாய்ப் பகுதியை இறுக்கக் கட்டி உரிய இடங்களில் வைக்குமாறு மருத்துவ அதிகாரி பணிமனை கேட்டுள்ளது. (த-159)

# அனுமதி விண்ணப்பம் இன்று வழங்கப்படும்

கொடிகாமம், ஜூன் 1

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் 2020 தரம் ஒன்று அனுமதிக்கான விண்ணப்பங்கள் பின்வரும் ஒழுங்குகளில் வழங்கப்படவுள்ளன என்று அதிபர் பொ.நடேசலிங்கம் அறிவித்துள்ளார்.

ஆண் மாணவர்களுக்கான விண்ணப்ப படிவங்கள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கும் பெண் மாணவிகளுக்கான விண்ணப்ப படிவங்கள் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கும் பாடசாலை வளாகத்தில்வைத்து வழங்கப்படும்.

அனுமதிபெற விரும்பும் பெற்றோர் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உரிய ஒழுங்கைக் கடைப்பிடித்துப் பாடசாலைக்கு சமூகமளித்து விண்ணப்ப படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்று மேலும் அறிவித்துள்ளார். (த-159)

# தடுத்து நிறுத்தப்பட்டது சந்நிதி பாதயாத்திரை

கொடிகாமம், ஜூன் 1

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவிலிலிருந்து ஆரம்பமான கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரையை சாவகச்சேரி பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

பல கோவில்களையும் தரிசனம்செய்து கதிர்காமத்தை சென்றடைவது வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது. தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை மதியம் ஆரம்பித்த பாதயாத்திரை புத்தூர் வீதி ஊடாக மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலை மறுநாள் வெள்ளிக்கிழமை சென்றடைந்தது.

அங்கு வழிபாடுகளின் பின்னர் யாத்திரை குழுவினர் யாத்திரையை மேற்கொள்ள ஆயத்தமானபோது அங்கு சென்ற சாவகச்சேரி பொலிஸ் உயர் அதிகாரிகள் கொரோனா வைரஸ் தொற்று நிலைமையில் இங்கிருந்து நடந்து செல்ல முடியாது என்றும் தேவையேற்படின், வாகனத்தில் செல்லமுடியும் என்றும் தெரிவித்தனர்.

ஒவ்வொரு வருடமும் பாதயாத்திரையாகத்தான் கதிர்காமம் செல்கின்றோம். வாகனத்தில் செல்வது பாதயாத்திரை அல்ல என்று கூறி பாதயாத்திரை குழுவினர் யாத்திரையை இடைநடுவில் கைவிட்டு செல்வச்சந்நிதி கோவிலுக்கு திரும்பினர் - என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

# பொதுமக்கள் மீது தாக்குதல் மணல் கொள்ளையர் கைது

மட்டக்களப்பு, ஜூன் 1

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாகனேரில் பொதுமக்கள் மீது மண் அகழ்வோர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பிரதேசத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.எம்.ஜெயசுந்தர தெரிவித்தார்.

குறித்த நபர்களை பொலிஸ் நிலையத்தில் சரணடையுமாறு தாம் அழைப்பு விடுத்தபோதிலும் அவர்கள் அதனை மறுத்து பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதியில் தலைமறைவாகியிருந்துள்ளனர். அதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போது தப்பி ஓட முயற்சித்த நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகத்தின் பேரில் 10 பேர் கைது செய்யப்பட்டனர் ,மணல் ஏற்ற பயன்படுத்தப்படும் உழவு இயந்திரங்கள் 02,மோட்டார் சைக்கிள்கள் 5 ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏறாவூர் ,வாகரை, கல்குடா மற்றும் வாழைச்சேனைப் பிரதேசத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். குறித்த சந்தேகநபர்களை வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் பொலிஸார் மீது பொதுமக்கள் நம்பிக்கை கொள்வதுடன் சட்டத்தை கையில் எடுக்கவேண்டாம் என்றார்.

கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை ஓட்டமாவடி பிரதேசத்தைச் சேர்ந்த மண் அகழ்வோரால் வாகனேரி பிரதேசத்தின் சமூக அமைப்புக்களின் உறுப்பினர்கள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் என பலர் கம்புத் தடி கொண்டு தாக்கப்பட்டனர். இதனால் பாதிக்கப்பட்ட மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பிரதேசத்தில் தொடர்ச்சியாக அகழப்படும் மண் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து அதனைத் தடுக்கச் பொதுமக்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையின் போதே அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பப்பட்டிருந்தது. இதனைக் கண்டித்து பிரதேசத்தின் அரசியல் பிரமுகர்கள், அரச உயர் அதிகாரிகள் தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தனர்.

(ப)

# தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்கள் அவசியம்

## ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 1**

**நெகிழ்வுத் தன்மையுடன் மாறும் பணிச்சூழலில் தொழிலாற்றுவோரைப் பாதுகாக்கும் முறையில் தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்கள் உருவாக்கப்பட வேண்டும். இளையோரைப் பாதுகாக்கும் வகையில் தொழிலாளர் சட்டங்களில் புதிய இணைப்புகள் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் அமைப்புச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான ஜனகன் வலியுறுத்தியுள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு மாவட்டத்தில் பல இளைஞர், யுவதிகள் பொருள்களை விநியோகிப்பவர்களாக மற்றும் வாகனச் சாரதிகளாகத் தொழிலாற்றுகிறார்கள். இவர்களின் தொழில் பாதுகாப்புக் கேள்விக்குறியாகவே இன்றும் உள்ளது. இலங்கையில் நடைமுறையில் உள்ள தொழிலாளர் சட்டத்தில் இவ்வாறு நெகிழ்வுத் தன்மையுடனும் மாறும் பணிச்சூழலிலும் தொழிலாற்றுவோரைப் பாதுகாக்கும் முறையில் திருத்தங்கள் உருவாக்கப்பட வேண்டும். பல இளைஞர், யுவதிகள் தங்களுடைய வருமானத்தை உறுதிப்படுத்துவதற்காகப் புதியதாக உலகில் நடைமுறையில் வந்துள்ள பொருள்களை விநியோகிக்கும் மற்றும் பிரயாணிகளை ஏற்றி இறக்கும் தொழில்களில் ஈடுபடுகிறார்கள். ஆனால் இத் தொழில் முறையில் அவர்களுடைய தொழிலைப் பாதுகாக்கும் சட்டங்கள் போதியளவில் நடைமுறையில் இல்லை என்பதே கசப்பான உண்மையாகும். இதனால் பல எதிர்பார்ப்புகளுடன் இந்தப் புதிய தொழில்முறையில் ஈடுபடும் இளைஞர், யுவதிகள் பல்வேறு வகையான இன்னல்களுக்கு முகம்கொடுக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் தாங்கள் எதிர்நோக்கும் தொழில் ரீதியான பிரச்சினைகளுக்கு எவ்வாறு சட்ட ரீதியாக கையாள்வது என்று தெரியாமல் நிர்க்கதியாகிறார்கள். இந்தத் தொழில்களை வழங்கும் நிறுவனங்களுக்குத் தமது வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தும் தேவை அதிகம் இருப்பதால் இத் தொழிலாளர்களின் நலனில் அதிக சிரத்தை எடுப்பதில்லை. இன்று இந்தப்பிரச்சினை, சத்தம் இல்லாமல் பல இளைஞர், யுவதிகளை நிர்க்கதியாக்குகின்றது என்பதே உண்மை. இந்த நாட்டின் எதிர்காலத்துக்கு இந்த இளைஞர், யுவதிகளின் பங்கு மிக அவசியம் என்பதை அனைத்துத் தரப்புகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறான தொழில் முயற்சிகள் எமது நாட்டுக்கு பல்வேறு வகையில் பயனளிக்கும் என்பதும் உண்மை. எனவே, தொழிலாளிகளைப் பாதுகாக்கும் வகையில் தொழிலாளர் சட்டங்களில் புதிய இணைப்புகள் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும் என்றார். (ப)

# பல்கலை அனுமதிக்கான கால எல்லையை நீடிக்கவும்

*முன்னாள் எம்.பி. இம்ரான் மகரூப் கோரிக்கை*

கொழும்பு.ஜூன் 1

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப கால எல்லையை நீடிக்குமாறு, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் கல்வி அமைச்சின் முன்னாள் கண்காணிப்பு உறுப்பினருமாகிய இம்ரான் மகரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர், உயர் கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'2019 க.பொ.த உயர்தரத்தில் சித்திபெற்று, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களின் விண்ணப்ப படிவத்தை, பாடசாலை ஆரம்பித்து இரு வாரங்களின் பின்னர் சமர்ப்பித்தல் போதுமானதென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.'எனினும் தற்போது ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் குறித்த விண்ணப்பத்தை பூர்த்திசெய்து அனுப்ப வேண்டுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவொரு முரணான விடயமாகும்.இந்த முரண்பாட்டால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடிய வாய்ப்பு உள்ளது.

இந்த அரசாங்கத்தின் கல்வி சார்ந்த நிலையற்ற ஒரு கொள்கையை இது சுட்டிக்காட்டுகின்றது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக மாணவர்களுக்கு இந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படலாம்.

பாடசாலைகள் எப்போது ஆரம்பிக்கப்படப் போகின்றன என்று தெரியாத ஒரு சூழ்நிலையில் அதிபர், ஆசிரியர்களுடைய ஆலோசனைகளைக் கூட பெற்றுக் கொள்ளமுடியாத சூழ்நிலை மாணவர்களுக்கு ஏற்படலாம்.

இவற்றைக் கருத்தில்கொண்டு, பல்கலைக்கழக அனுமதிக்கான கால எல்லையை நீடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்' என்றுள்ளது (ஐ-40)

# போதைப்பொருள் குற்றம்; ஒரே நாளில் 714 பேர் கைது

கொழும்பு, ஜூன் 1

மேல் மாகாணத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் போதைப்பொருள்களுடன் 714 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக் கோனின் அறிவுறுத்தலுக்கமைய நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணிவரையான 24 மணித்தியாலங்களுள் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு கைதுகள் இடம்பெற்றன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.



இதன்போது, ஹெரோய்னுடன் 218 பேரும், கஞ்சா வைத்திருந்தனரென 98 பேரும், சட்டவிரோத மதுபானம் மற்றும் கோடா வைத்திருந்தமை தொடர்பில் 320 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் ஐஸ், மாவா, பாபுல் உள்ளிட்ட போதைப்பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 78 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

# சுவாசப்பை, நுரையீரல் பாதிப்பே கருஞ் சிறுத்தை இறக்க காரணம்

கொழும்பு, ஜூன் 1

இலங்கையில் அரிய வகை உயிரினமாகக் கருதப்படும் கருஞ்சிறுத்தை ஒன்று அண்மையில் உயிருடன் பிடிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்தது. நாட்டு மக்களின் கவனத்தை ஈர்த்த கருஞ்சிறுத்தையின் இறப்புக்கு சரியான காரணம் தற்போது வெளியாகி உள்ளது. கருஞ்சிறுத்தையின் நுரையீரல் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்ததுடன், அதன் சுவாசப்பை மற்றும் நாளங்களுக்கிடையிலான உறுப்புகளும் பாதிக்கப்பட்டமையே இறப்புக்கான காரணமென பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.



கடந்த 27 ஆம் திகதி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் பொறியிலிருந்து மீட்கப்பட்ட கருஞ்சிறுத்தைக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. கால்நடை வைத்தியர்களின் விசேட கண்காணிப்பின் கீழ் கடந்த சில நாள்களாக கருஞ்சிறுத்தைக்குச் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அது உயிரிழந்தது. கருஞ்சிறுத்தையின் இறப்புக்கு காரணத்தைக் கண்டறிவதற்கான பரிசோதனைகளை நடத்தும் பொறுப்பு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை வைத்திய பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ப)

# வீதிகளில் கழிவுகள் கொட்டிய 10 பேருக்கு ரூ.44,750 தண்டம்

## யாழ்ப்பாண நீதிமன்று விதித்தது அரச அலுவலர்களும் தப்பவில்லை

**வலி.தென்மேற்கு, ஜூன் 1**

**சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் வகையில் இரவில் வீதிகளில் திண்மக் கழிவுகளைக் கொட்டிவந்தனர் என்ற குற்றச்சாட்டில் 18பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் 10 பேருக்கு 44ஆயிரத்து 750 ரூபா தண்டம் விதித்தது யாழ்ப்பாண நீதிவான் மன்று.**

நீதிமன்றுக்கு சமூகமளிக்காத ஏனைய 8 பேரின் விசாரணைகளை அடுத்த மாதத்துக்கு ஒத்திவைத்து 8 பேரையும் மன்றில் முற்படுத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபைப் பகுதியில் இரவுநேரங்களில் வாகனங்களில் வந்து வீதிகளில் திண்மக் கழிவுகளைக் கொட்டுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. இதனால் சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படுகின்றது. மக்கள் நடமாட்டத்துக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது.

இவர்களைக் கையும் மெய்யுமாகப் பிடிக்க முன்வந்த யாழ்ப்பாண மாநகர பொது சுகாதார பரிசோதகர் ஆ.சுரேஸ் குமார், கடந்த மூன்று மாதங்களுக்கு முன் அந்தந்த பகுதிகளில் வசிப்பவர்களின் உதவியுடன் குறிப்பிட்ட இடங்களில் இரவுநேரங்களில்மூன்றுதினங்கள் மறைந்திருந்து கவனித்திருந்தனர். அதன்போது சந்தேகநபர்கள் வாகனங்களில் வந்து திண்மக் கழிவுகளைக் கொட்டிச் செல்கின்றமை அவதானிக்கப்பட்டது.

ஊடகங்கள் வாயிலாக அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டபோதும் அதைக் கவனத்தில்கொள்ளாத சந்தேகநபர்கள் குப்பைகளைக் கொட்டிவருகின்றமை தெரியவந்தது. அதனையடுத்து அவர்களைப் பிடித்து நீதிமன்றில் முற்படுத்துவதென்று முடிவெடுத்து கைதுவேட்டையை ஆரம்பித்தனர்.

அதன்படி நடத்திய நடவடிக்கையிலேயே 18 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் அரச அலுவலர்களும் உள்ளடங்கியிருக்கின்றமை பின்னரே தெரியவந்துள்ளது. நிர்வாக ரீதியான அறிவிப்புகளை அரச அலுவலர்களே மீறியுள்ளமை தெரியவந்துள்ளது.

எவ்வாறிருப்பினும் 18 பேருக்கும் எதிராக கடந்த புதன்கிழமை சுகாதார பரிசோதகர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மன்றுக்குச் சமூகமளித்த 10 பேர் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு 44ஆயிரத்து 750ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மன்றுக்குச் சமூகமளிக்கத் தவறிய 8 பேர் மீதான வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-115)

## இறப்பு வீடுகளுக்கென சில அறிவுறுத்தல்கள்

கொழும்பு, ஜூன் 1

இலங்கையில் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும் நடவடிக்கைக்கமைய இறப்பு வீடுகளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள் பற்றி சுகாதார பிரிவினரால் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

இறப்பு வீடுகளில் முடிந்தளவு குடும்ப உறுப்பினர்களை மாத்திரம் மட்டுப்படுத்துமாறும் இறப்பு வீடுகளில் இருப்பவர்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டியது கட்டாயம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறப்பு வீடுகளில் நுழையும் இடங்களில் கைகளை கழுவுவதற்கான வசதிகளை ஏற்படுத்த வேண்டும். அமர்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடங்களில் குறைந்தபட்சம் ஒரு மீற்றர் தூர இடைவெளியில் கதிரைகளை வைக்கவேண்டும்.

இறப்பு வீடுகளில் டாம், கரம், சூதாட்ட அட்டை விளையாட்டுகள் விளையாடுவதற்கு அனுமதி வழங்கப்படாது.

மதுபானம் அருந்துவதற்கு, புகைபிடித்தல், வெற்றிலை உட்கொள்வதற்கும் இறப்பு வீடுகளில் அனுமதி வழங்கப்படக்கூடாது.

இறப்பு வீடுகளுக்கு வருபவர்களுக்கு தேநீர் வழங்கினால் மீள்பாவனை செய்யாத கோப்பைகளை பயன்படுத்துவதோடு, சூடான பானங்கள் மாத்திரமே வழங்கப்பட வேண்டும். பயன்படுத்திய கோப்பைகளை குப்பையில் வீசுவதற்கான ஏற்பாடுகளும் செய்திருத்தல் அவசியமாகும்.

அவசியம் இல்லை என்றால் இறப்பு வீடுகளுக்கு செல்லாமல் இணையத்தளம், தொலைபேசி ஊடாக தமது அனுதாபங்களை வெளிப்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு வீடுகளுக்கு சென்றால் அங்கு செலவிடும் நேரம் குறைவாக இருக்க வேண்டும். செல்லும் இடங்களில் யாரையும் தொட்டுப் பேசாமல் ஒரு மீற்றர் தூரத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

உள்ளே செல்லும்போதும் வெளியே வரும்போதும் கை கழுவ வேண்டும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-159)



## மீள்சுழற்சி மையத்தில் தீ வைத்த விசமிகள்

நாவாந்துறை காக்கைதீவு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண மாநகர சபையின் உக்கக் கூடிய திண்மக் கழிவுகளை மீள்சுழற்சிக்குட்படுத்தும் நிலையத்தில் விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் திண்மக்கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தி இயற்கை பசளைகளை உற்பத்தி செய்யும் நிலையம் காக்கைதீவுப் பகுதியில் அமைந்துள்ளது.

அந்த நிலையத்தில் கம்பிவலை வேலியைப் பிரித்து உள்ளே புகுந்த கும்பல் ஒன்று ரயர்கள் இரண்டைப் போட்டு அங்கு காணப்பட்ட குப்பைகளுக்கு தீ வைத்துள்ளது.

இதுதொடர்பில் பதில் முதல்வர் து.ஈசனுக்கு அந்தப் பகுதி மக்கள் அலைபேசியில் தகவல் வழங்கினர்.

மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் திண்மக்கழிவு மீள்சுழற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். விசாரணை நடக்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

## கொங்கிறீற் பாலமாகிறது நொச்சிமோட்டை பாலம்

வவுனியா, ஜூன் 1

ஏ-9 வீதி வவுனியா நொச்சிமோட்டையில் அமைக்கப்பட்டுள்ள இரும்பு பாலம் நிரந்தரமான பாலமாக கொங்கிறீற் மூலமாக அமைக்கும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

இரும்பினாலான தற்காலிக பாலமாக அது இருப்பதால் அடிக்கடி சேதமடைவதோடு சேதமடையும் பகுதி திருத்தப்பட்டு வரும் நிலைமையே நீடிக்கின்றது.



பாலத்தை நிரந்தரமான பாலமாக அமைப்பதற்கு அரசு நிதி ஒதுக்கிய நிலையில், கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பணிகள் தளர்த்தப்பட்டிருந்தன. இந்த நிலையில் தற்போது பாலம் அமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

ஒரு வருட ஒப்பந்தத்தில் இது அமைக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (கு-110)

## குழந்தைகள் கணக்கெடுப்பு

கொழும்பு, ஜூன் 1

குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் ஆறு பிரிவுகளின் கீழ் ஒரு சிறப்பு கணக்கெடுப்பை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குழந்தை இல்லங்கள், பகல்நேர பராமரிப்பு நிலையங்கள், முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளின் பல பிரிவுகளின் கீழ் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

கொழும்பு, ஜூன் 1

ஹம்பலாந்தோட்டை பகுதியில் நபர் ஒருவர் கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர் அந்தப் பகுதியை சேர்ந்த 35 வயதுடைய நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பிரச்சினைகளின் காரணமாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுக்காகவே குறித்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளார். (எ)

## துப்பாக்கி பிரயோகம்; சந்தேகநபர் ஒருவர் கைது

துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவை சொய்சாபுர பிரதேசத்திலுள்ள உணவு விடுதி யொன்றுக்கு, காரில் வந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி அதன் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

பாணந்துறை எலுவில பிரதேசத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# இலங்கையர்களை நாட்டுக்கு மீள அழைத்து வரும் பணி தொடரும்

## வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் உறுதி

கொழும்பு, ஜுன் 1

**வெளிநாடுகளில் குறிப்பாக தமது சட்ட ரீதியான அந்தஸ்த்துக்களை அல்லது தொழில் வாய்ப்புக்களை இழந்து, பாதிக்கப்பட்டுள்ள புலம் பெயர்ந்த தொழிலாளர்களை மத்திய கிழக்கு மற்றும் ஏனைய பிராந்தியங்களிலிருந்து நாட்டுக்கு மீள அழைத்து வரும் பணிகள் தொடரும் என வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் தினேஷ் குணவர்தன உறுதியளித்துள்ளார்.**



சமீபத்தில் குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்களில் கொவிட் 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர்களின் அதிகரித்த எண்ணிக்கையைத் தொடர்ந்து, சுகாதாரத் துறை மற்றும் தனிமைப்படுத்தல் மையங்களில் தற்போது காணப்படும் கணிசமான அழுத்தங்களைக் கருத்தில் கொண்டு, கொவிட் 19 பணிக்குழுவுடன் கலந்தாலோசித்து இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும். எதிர்காலத்தில் அனைத்து விமானங்களிலும் ஏறுவதற்கு முன்னர் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் ஆராயப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்களுக்கு உலர்உணவு மற்றும் மருந்துகளை வழங்குவதனுடாகவும், அவர்கள் இருக்கும் இடங்களிலேயே அவர்களுக்குத் தேவையான மருத்துவ அவசர நிலைகளின் போது உதவிகளை வழங்குவதனூடாகவும் வெளிநாட்டு உறவுகள் அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியன தொடர்ந்தும் ஆதரவுகளை வழங்கும் அதே வேளை, நாட்டுக்கு மீள அழைத்து வரப்படுவதற்கு எதிர்பார்ப்பவர்களுக்கு அதற்கான வசதிகளையும் தொடர்ச்சியாக மேற்கொள்ளும். அவ்வப்போது மாற்றமடையும் வகையில், நாட்டுக்கு மீள அழைத்து வரப்படுவதற்கான தீர்மானங்கள் பாதிக்கப்படும் தன்மையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும் என மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

மாணவர்களை மீள அழைத்து வருவதற்கான ஆரம்பப் பணிகளிலிருந்து தொடங்கி, மாணவர்கள், குறுகிய கால வீசாவையுடைய வர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் என நாடு திரும்பு வதற்கான தமது ஆர்வத்தைப் பதிவு செய்துள்ள பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தம்மைப் பதிவு செய்த காலவரிசையை சம்பந்தப்பட்ட தூதரகங்கள் தற்போது கண்டிப்பாக பின்பற்றுகின்றன. கிரேட்டர் மாலியில் அனைவரும் சமமாகப் பாதிக்கப்படக்கூடியவர்கள் எனக் கருதப்படும் மாலைதீவைத் தவிர, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகள் செயற்படும் ஏனைய 15 நிலையங்களில், புலம்பெயர்ந்தோரின் பிரிவில் யார் முன்னுரிமை பெற வேண்டும் என்பதை, தூதரகத்துடன் இணைக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிநிதியுடன் கலந்தாலோசித்து, தூதரகத்தின் தலைவர் தீர்மானிப்பார். சட்டபூர்வமான அந்தஸ்த்தை அல்லது தொழில் வாய்ப்பை இழந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும், ஆவண ரீதியான ஆதாரங்களின் அடிப்படையில், மருத்துவ அவசரநிலைகளையுடைய ஒரு சில விதிவிலக்குகள் நாட்டுக்கு மீள அழைத்து வரப்படுவதற்கான விஷேடமான சந்தர்ப்பமாக கருதப்படும். இந்த நெறிமுறையை கண்டிப்பாகப் பின்பற்றுமாறு தூதர கங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# நல்லாட்சி அரசை குறை கூறாதீர்

## *முன்னாள் எம்.பி.ஹர்ஷடிசில்வா தெரிவிப்பு*

கொழும்பு, ஜுன் 1

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் மக்களுக்குச் சலுகைகளை பெற்றுக் கொடுக்க முடியவில்லை என்றால் அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து எதிர்தரப்பினர் மீதோ ,முன்னைய அரசாங்கத்தின் மீதோ குறைசொல்வது முறையற்ற செயற்பாடாகும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடிசில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகதம்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசாங்கத்தினால் மக்களுக்கு எவ்வித சலுகைகளையும் வழங்கமுடியவில்லை. கொரோனா வைரஸ் பரவலை இதற்குக் காரணமாகக் காட்டினாலும், வைரஸ் பரவலுக்கு முன்னர் இருந்த அரசாங்கம் எவ்வித பயன்தரும் செயற்பாடுகளையும் மேற்கொள்ள வில்லை. இதேவேளை பசில் ராஜபக்ச ஊடக சந்திப்பொன்றின் போது தனியார்துறை ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காக தனியார் துறை உரிமையாளர்களுக்க போதிய நிதி வழங்கபியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதனால் தனியார் துறை ஊழியர்கள் நிறுவனங்கள் நிதியைப் பெற்றுக் கொண்டு தங்களுக்கு சம்பளம் வழங்கவில்லைஎன்று தவறான எண்ணைத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். எவ்வாறு யாருக்குமே நிதி பெற்றுக் கொடுக்கப்படவில்லை. ஏன் பசில் இவ்வாறு போலிப் பிரசாரம் செய்து மக்களை ஏமாற்றி வருகின்றார்.

இதேவேளை மே மாத அரச ஊழியர்களின் ஊதியத்தை நிறுத்தி வைப்பதனால் 100 பில்லியன் ரூபாவை சேர்த்து வைக்க முடியும் என்று ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்திருந்தார். இவ்வாறு எவ்வளவு நிதியை தற்போது சேர்த்து வைத்துள்ளார்கள் என்பதை தெரியப்படுத்த வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சியை பொறுப்பேற்ற போது நெற்களஞ்சியசாலையில் ஒரு நெல்மணிகூட களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று அமைச்சர் மஹிந்த யாப்பா அபே வர்தன தெரிவித்திருந்தார். இது உண்மைக்குப் புறம்பான தகவலாகும். நாங்கள் 42 மெட்ரிக் டொன் நெல்லை களஞ்சியப்படுத்தியிருந்தோம். அது தொடர்பிபில் ஆதாரங்களும்' எம்மிடம் இருக்கின்றன. அதேவேளை நுகர்வோர் அதிகாரசபையிடமும் அறிந்துக் கொள்ள முடியும்.

இந்த நெல்லுக்கு என்ன நடந்தது , அது எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் அவர்கள் நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அரசாங்கத்துக்கு உரியமுறையில் முகாமைத்தவம் செய்யமுடியவில்லை என்றால் அதனை எற்றுக் கொள்ள வேண்டும் . இதனை விடுத்து கடந்த அரசாங்கத்தையும் , எதிர்கட்சியையும் குறைக்கூறி வருவது நியாயமற்ற செயற்பாடாகும் - என்றார். (ப)

# யாழிலிருந்து சென்றவர்கள் விபத்தில் சிக்கி படுகாயம்

## *சிலாபத்தில் சம்பவம்*

சிலாபம், ஜுன் 1

சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பங்கதெனிய வெஹரகெலே பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் யாழ்ப்பாணத்திருந்துசென்றஐவர்படுகாயமடைந்துள்ளனர். விபத்தில் படுகாயமடைந்த ஐவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்தவர்கள் எனவும் இவர்கள் சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று வீதியில் பயணிக்க முற்பட்ட போது, பின்பக்கமாக அதிவேகத்தில் பயணித்த டிப்பர் வண்டி எதிரே வந்த வான் மற்றும் முச்சக்கர வண்டியுடன் மோதி விபத்தை ஏற்படுத்தும் காட்சி அருகில் பொருத்தப்பட்டுள்ள சீ.சீ.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது. விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனம் மற்றும் முச்சக்கர வண்டி ஆகியவற்றின் சாரதிகள் சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலாபம் போக்குவரத்துப் பொலிஸார் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# கொரோனா வைரஸ் 20 அடி பாயுமாம்

## ஆய்வில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜுன் 1

கொரோனா வைரஸ் தொற்று 6 அடி தூரம்தான் பரவும் என்று கூறப்பட்டு வந்த நிலையில் அது தொற்று 20 அடி வரை பாயும் என்று அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அந்த ஆய்வில் கூறும்போது, "வருகிற குளிர்காலத்தில் இந்தியாவில் பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. பேசுவதன் மூலம் தெறிக்கும் துளிகளில் கொரோனா பரவுகிறது. புவி ஈர்ப்பு சக்தியால் அவை நிலத்தில் உதிர்ந்து விடுகின்றன. சில துளிகள் காற்றில் நீடிக்கின்றன. இவற்றால் 20 அடி தூரம் வரை நோய் தொற்று பரவக்கூடும்" என்று தெரிவித்துள்ளது. (ப)

# இலங்கை திரும்பியவர்களில் 505 பேருக்கு இதுவரை கொரோனா

கொழும்பு, ஜுன் 1

வெளிநாடுகளிலிருந்து இலங்கை திரும்பி வந்தவர்களில் இதுவரை 505 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இவ்வாறு தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்கள் எனவும் அவர் மேலும் கூறினார்.

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகளை இலங்கை அரசு முன்னெடுத்திருந்தது. அண்மைக் காலங்களில் அவ்வாறு பலர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு, தனிமைப்படுத்தல்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். (ப)

# தமிழ் இன அழிப்பின் அடையாளமே

# யாழ். நூலக எரிப்பு




**பொதுநூலக எரிப்புச் சம்பவம் இலங்கையில் தொடரும் இனப் பிரச்சினையில் ஒரு முக்கிய மான அத்தியாயமாகத் திகழ்கின்றது. 20 ஆம் நூற்றாண்டில் இடம் பெற்ற மிக மோசமான வன்முறைச் சம்பவமாகவும் கருதப்படுகின்றது.**

தெற்காசியாவின் அறிவுக் களஞ்சியமாக போற்றப்பட்ட யாழ் .பொது நூலகம் எரிக்கப்பட்டு 39 ஆண்டுகள் கடந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில் அத்துயரச் சம்பவம் ஏற்படுத்திய வடு இந்தக் கணம்வரை மாறவில்லை. ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இச் சம்பவமானது தமிழ் மக்களின் அடையாளம், அறிவு மற்றும் பண்பாடு போன்றவற்றை இல்லாதொழிக்கும் தமிழ் இன அழிப்பின் ஓர் அடையாளமாகவே தமிழ் மக்கள் இன்றும் பார்க்கின்றார்கள்.

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் 1981ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் நாள் சாம்பலில் தோய்ந்த ஒரு கறுப்பு நாளாகவே பதிவு செய்யப்பட்டுவிட்டது. ஆம் அன்றுதான் ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்லாது, ஒட்டு மொத்த தமிழர்களுக்கும் ஓர் அறிவுப் புதையலாகவும், கல்விக் கருவூலமாகவும் விளங்கிய யாழ்ப்பாணப் பொதுநூலகம் இனவெறிக் கும்பல் ஒன்றால் நள்ளிரவு தீயிட்டுச் சாம்பல் மேடாக்கப்பட்டது. அன்று இரவு பத்து மணியளவில் நூலகத்தினுள் நுழைந்த இனவெறிக் கும்பல் அங்கிருந்த காவலாளியை முதலில் துரத்தியடித்தனர். பின்னர் தாம் முன்னேற்பாடாகக் கொண்டுவந்த உபகரணங்களின் உதவியுடன் நூலகத்தின் கதவுகளை உடைத்தவாறு உள்ளே நுழைந்தது அந்த கும்பல். அந்தக் கும்பலில் இருந்தவர்களின் கண்களுக்கு அங்கிருந்த நூல்கள் தமிழர்களின் உருவத்தை ஒத்ததாகக் காணப்பட்டன. கடும் சினத்துடன் அங்கு வைக்கப்பட்டிருந்த நூல்களுக்கும் தேடற்கரிய பெறுமதி வாய்ந்த ஓலைச் சுவடிகளுக்கும் பெற்றோலைத் தாராளமாகத் தெளித்த பின்னர் தீ மூட்டி எரித்தழித்தனர். நூல்கள் கொளுந்துவிட்டு எரிவதைக் கண்டதும் பெருங்குரலில் ஆர்ப்பரித்துத் தமது மகிழ்ச்சியை அந்தக் கும்பல் வெளிப்படுத்தியது.

தென்னாசியாவின் மிகப் பெரிய அறிவியல் பொக்கிஷமாக போற்றப்பட்ட யாழ்ப்பாண பொது நூலகத்தின் அழிப்பு என்பது மனித நாகரிகத்தின் மோசமான துயரம். 1981ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவில் இந்தக் கொடுமை நேர்ந்தபோது அதனைச் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மாடியில் இருந்து நேரில் பார்த்த தாவீது அடிகளார் அந்த கணத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தி ஒன்றே அந்த நூலகத்தின் பெறுமதியை எடுத்துக் காட்டுகின்றது.

இந்தப் பொது நூலக எரிப்புச் சம்பவம் இலங்கையில் தொடரும் இனப் பிரச்சினையில் ஒரு முக்கிய மான அத்தியாயமாகத் திகழ்கின்றது. 20 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற மிக மோசமான வன்முறைச் சம்பவமாகவும் கருதப்படுகின்றது. அதிலும் அப்போதைய இலங்கையரசின் அமைச்சரவையில் முக்கிய பங்கு வகித்த அமைச்சர் ஒருவரும் பெரும்பான்மையின அரசியல் தலைவர்களும் நூலக எரிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரிகளாகத் திகழ்ந்தனர் என்று இன்னமும் நம்பப்படுகின்றது.

இலங்கையின் சிறுபான்மையினத்தவர்களில் ஒரு சாராரான தமிழர்கள் பொதுவாகவே கல்வியில் சிறந்து விளங்கினர். தமிழ் மாணவர்கள் பெருமளவில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று உயர் கல்வியைப் பெற்று வந்தனர். அதை இனவாதிகளால் பொறுக்க முடியவில்லை. தமிழர்களின் திறமைக்கு வேட்டு வைக்கும் தரப்படுத்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு, தமிழ் இளைஞர்களின் கல்விக்குச் சாவுமணி அடிக்கப்பட்டது.

திறமையிருந்தும் உயர் கல்விக்கான வாய்ப்புக் கிடைக்காததால் இளைஞர்கள் மத்தியில் விரக்தியும்,வேதனையும் ஏற்படத் தொடங்கின. இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு இதுவே முதல் காரணம் என்று கூறலாம்.

தமிழர்கள் கல்வியில் உயர்நிலையில் இருப்பதை விரும்பாத இனவாதிகள் அதற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க நினைத்ததன் விளைவாகவே இந்த நூலக எரிப்புச் சம்பவம் நிகழ்ந்தது என்று துணிந்து கூறலாம். ஆனால் இன்றுவரை இந்தக் கொடிய செயலுடன் தொடர்புடைய எவரும் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவில்லை. இதுபோன்ற சம்பவங்கள் இதற்கு முன்னரும் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளன. நல்லூர் நாயன்மார்கட்டில் அமைந்திருந்த யாழ்ப்பாண இராசதானியின் தேசிய நூலகமான சரஸ்வதி நூலகம் தீயிட்டு அழிக்கப்பட்டது. இங்கு பல சித்த மருத்துவத்துடன் தொடர்புடைய நூல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன.

**இந்த நூலக எரிப்பு மூலம் தென்னாசியாவில் இருந்து தேடி வைத்த பொக்கிங்கள். முக்கியமாக ஓலைச் சுவடிகள் 1800 ஆம் ஆண்டுக்கான பத்திரிகை பதிவுகள் அனைத்தும் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன.**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகமும் 1984ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் முதல் நாள் தீயிட்டு அழிக்கப்பட்டது. தமிழர்களின் கல்விச் செல்வத்தை முற்றாக அழித்து துடைத்தழிப்பதை இனவாதிகள் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தமை இவை மூலம் தெளிவாகின்றது.

1930 ஆம் ஆண்டு ஜேர்மனி பேளின் வீதியில் நூற்றுக்கனக்கான புத்தகங்கள் எரிக்கப்பட்டு வீதிகளில் எல்லாம் சாம்பல் பரவியது என்று சொல்லுவார்கள். நாசிகளின் இனப் படுகொலைக்கு அவ்வழிப்பு பெரும் எடுத்துக்காட்டு. யாழ் .நூலக எரிப்பும் தமிழ் இனப்படுகொலை என்றே கருத வேண்டும்.

இந்த நூலக எரிப்பு மூலம் தென்னாசியாவில் இருந்து தேடி வைத்த பொக்கிஷங்கள், முக்கியமாக ஓலைச் சுவடிகள் 1800 ஆம் ஆண்டுக்கான பத்திரிகை பதிவுகள் அனைத்தும் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன. இப்போது யாழ்ப்பாணம் பொது நூலகம் புதுப்பொலி வுடன் திகழ்ந்தாலும் அழிக்கப்பட்ட அரிய நூல்களும் ஓலைச்சுவடிகளும் திரும்பக் கிடைக்கப் போவதில்லை. கடந்த 33ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களின் பெரும் பொக்கிஷமாகத் திகழ்ந்த நூலகம் அழிக்கப்பட்ட சோக நினைவுகள் என்றுமே தமிழர்களின் மனங்களில் இருந்து மறைந்து விடாது. தமிழர்களின் வரலாற்றில் இந்தச் சம்பவம் ஒரு கரும்புள்ளியாக மாறி உறுத்திக்கொண்டே இருக்கும் என்பதில் ஐயமே இல்லை.





# மல்லாகம் பகுதியில் பெற்றோல் குண்டுகள்



மல்லாகம் பகுதியில் நேற்று நண்பகல் 5 பெற்றோல் குண்டுகள் மீட்கப்பட்டன. ஆவாக் குழு மேற்கொள்ளவிருந்த தாக்குதலை அறிந்து இராணுவத்தினரால் அந்தத் திட்டம் முறியடிக்கப்பட்டு இந்தப் பெற்றோல் குண்டுகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த கும்பல் மல்லாகத்தில் உள்ள சுடலை ஒன்றில் ஒன்றுகூடி தாக்குதல் ஒன்றினை நடத்துவதற்குத் திட்டம் தீட்டிய விடயம் இராணுவத்திற்கு தெரியவந்தது. இதனையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் அவ்விடத்தில் இருந்து 5 பெற்றோல் குண்டுகளையும் 2 இரும்புக் கம்பிகளையும் மீட்டு மல்லாகம் பொலிஸில் ஒப்படைத்தனர். அதேவேளை 4 நபர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர். (ம)

# சுமந்திரனுக்கு முண்டுகொடுத்து சிறிதரன் தேர்தல் வெடிகுண்டு!

## சாடுகிறார் சிவசக்தி ஆனந்தன்

கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் விடுதலைப் போராட் டத்தை விமர்சித்துக் கருத்துக்களை வெளியிட்டபோது அமைதி காத்தமையால் அவர் மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றித் தொடர்ச்சியாக பேசிவந்ததோடு, புலிகளின் தளபதிகளில் ஒருவரின் மைத்துனராக இருக்கும் ஒருவரே மௌனமாக இருந்துவிட்டாரே என்ற அதிருப்திகளும் மக்கள் மத்தியில் உண்டு. ஆகவே அவையனைத்தையும் திசை திருப்பவே திடீரென ராஜபக் ஷவினர் மீது சிறிதரன் சீறியிருக்கின்றார். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்ட ஒரு அரசியல் கட்சியோ அமைப்போ இல்லை. இதற்கென சின்னமும் இல்லை. அவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எவ்வாறு தடை செய்யமுடியும். நகைச்சுவை நடிகர் வடிவேல் நகைச்சுவைக்காக கிணற்றைக் காணவில்லை என்று வழக்குப்பதிவு செய்யுமாறு கூறுவார். பதிவுகளே இல்லாத கட்டமைப்பொன்றை தடைசெய்வதாக கூறுவதும் அதுபோன்று தான் உள்ளது.

அடுத்ததாக, அவர் தமிழ் அரசுக் கட்சிக்கு பதிலாக, கூட்டமைப்பென கூறிவிட்டார் என்று வைத் துக் கொள்வோம். தமிழரசுக் கட்சியைக் கூட எந்த வொரு அடிப்படையிலும் அரசு தடைசெய்யாது. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. சமஷ்டிக் கட்சியாக தமிழரசுக்கட்சி இருந்தாலும், தாம் பிரிவினையைக் கோரமாட்டோம். சமஷ்டி பிரிவினை இல்லையென்று சத்தியக்கடதாசி உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டாகி விட்டது.

மேலும் தற்போதைய ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுத்ததைப் போன்று இம்முறையும் முண்டு கொடுப்பதற்கு தயாராகி விட்டது. ஆகவே தமக்கு ஆதரவாக, ஒத்துழைப்புடன் செயற்பட தயாராக உள்ள அரசியல் தரப்பை ஆட்சியாளர்கள் தடைசெய்வார்களா? ஆகவே இத்தகைய கருத்துக்கள் அனைத்துமே தேர்தல் வெடிகுண்டுகளே.

எனது கடந்தகால அவதானிப்புக்களின் அனுபவத்திலிருந்து, தேர்தல் நெருங்கும் தறுவாயில், விசாரணைக்கும் அவர் அழைக்கப்பட்டாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. கடந்த காலத்தில் அவ்வாறான நிகழ்வுகளும் இடம்பெற்றிருக்கின்றன. ஆகவே சற்று ஆழமான கரிசனை செலுத்தினீர்கள் என்றால் அதன் பின்னணி புரியும் - என்றார்.

(ம-ஒ,5,20,110)


## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 03 . 1935 — மறைவு 31 . 05 . 2020



### செல்லையா இராசரத்தினம்

**(முன்னாள் C.T.B யாழ்ப்பாணம் டிப்போ சாரதி)**

யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இராசரத்தினம் (முன்னாள் C.T.B. சாரதி) நேற்று (31.05.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இ.செல்லமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இ.சந்திரசேகரம் மற்றும் யமுனா (இந்தியா), மீனா (கனடா), விஜயா (கொக்குவில்), வளர்மதி (கனடா), மதியழகன் (கனடா), ரஞ்சன் (கனடா), கிருபாகரன் (நோர்வே), பாலசிறீதரன் (கனடா), இராஜரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2020) திங்கட்கிழமை கனடா (ரொரன்ரோவில்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 4336 446
001416564979 (கனடா)

தகவல்:
மகள் - விஜயா,
மகன் - மதியழகன்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 03 . 1956 — மறைவு 30 . 05 . 2020



### ஆறுமுகம் உருத்திரமூர்த்தி

சுழிபுரம் மேற்கை பிறப்பிடமாகவும், இணுவில் மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் உருத்திரமூர்த்தி கடந்த (30.05.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் (பவானி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் அன்னமுத்து தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான நடேசர் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, விசாகரத்தினம் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, முருகமூர்த்தி, சிவபாதம், வரதராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, சிவயோகபாக்கியம், ருக்மணி, விக்கினேஸ்வரி காலஞ்சென்றவர்களான சிவஞானரட்ணம், அன்னம் மற்றும், சிவஞானசுந்தரம் (கனடா), சிவகாம்பிகை, சிவயோகசுந்தரம், கமலாம்பிகை சிவராஜசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
077 876 3269

தகவல்:
ஆ.விசாகரட்ணம்

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்

## நிகழ்நிலை வகுப்புக்கள் (Online Classes)

எமது நிறுவனத்தில் இடை நிறுத்தப் பட்டிருந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் **Zoom** செயலி மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இதில் ஏற்கனவே கற்று வந்த சகல மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் (8.00 AM முதல் 4.00 PM வரை) பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

| பிரிவு | Hotline Number |
|---|---|
| 2020 மீட்டல் | 077 203 3006 |
| 2021 | 076 566 3006 |
| 2022 | 076 569 3006 |

**நாட்டின் தற்போதைய அசாதாரண நிலைமைகள் சீராகும் வரை எமது நிறுவன இணைய இணைப்பினூடாக கற்கும் மாணவர் எவரிடமும் எவ்வித கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது.**

இரா.அருட்செல்வன்
நிர்வாகி

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மேற்கில் வசித்தவரும் தற்போது வரணி இயற்றாலையில் வசித்தவருமான கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை நேற்று (31.05.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கந்தையா, குஞ்சுப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வரணி இயற்றாலை ஊத்தல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி இயற்றாலை,
வரணி.

தகவல்:
பேரமக்கள்.

## வேலையாள்கள், சாரதி தேவை

மிக்சர் தொழிற்சாலைக்கு வேலையாள்கள், முச்சக்கர வண்டி சாரதி தேவை.

தொடர்பு:077 54 600 28

## தேவை

தேங்காய், கொப்பறா, தானிய வகைகள் கொள்வனவு செய்யப்படும்.

இல.104, மாப்பியன் மில், சுதுமலை, மானிப்பாய்.

தொடர்பு: 0777 722 215

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், ரேவதி நட்சத்திர விவாகரத்துப் பெற்ற, 1985 ஆம் ஆண்டு பிறந்த, தனியார் துறையில் கடமைபுரியும் மணமகளிற்கு பொருத்தமான மணமகன் தேவை. 076 788 2553

## பெண் உதவியாளர் தேவை

Cargills Squarஇல் (No:11, 1st Floor, Jaffna) அமைந்துள்ள Secrets விற்பனை நிலையத்துக்கு பெண் உதவியாளர் தேவை.

**தகைமை:** A/L or O/L ஆங்கில அறிவு, வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது.

**வேலை நேரம்:** 10.00 A.M to 7.30 P.M. Monday - Saturday

**தொடர்புகளுக்கு:**
Priya.G 077 9510436, 021 222 6488

## திருநெல்வேலிச் சந்தை வியாபாரிகள் நுகர்வோர் மற்றும் பொதுமக்களுக்கான சந்தை நடவடிக்கை தொடர்பான நல்லூர் பிரதேச சபையின் அறிவுறுத்தல்கள்

(கோரணாவில் இருந்து பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்)

1) சந்தையில் வியாபார நடவடிக்கைகள் காலை 05மணிமுதல் பி.ப6மணிவரை இடம் பெறும்
2) சந்தைக்கான மரக்கறியுட்பட்ட பொருட்கள் ஏற்றியிறக்கம் அதிகாலை 5மணி முதல் காலை 6.30மணிவரை சந்தையின் கிழக்கு பக்க வாயிலூடாக மட்டும் இடம் பெறும்
3)- காலை 7.00 மணிக்கு பின்பே சகல சில்லறை வியாபாரிகளிற்கு அனுமதி வழங்கப்படும்
4) மரக்கறிகள், பழவகைகள் ,வெற்றிலை மற்றும் அனுமதித்த சில்லறை விற்பனை யாவும் சந்தை மேற்தளத்திலேயே நடைபெறும் - கீழ் தளத்தில் எந்தவித விற்பனைக்கும் அனுமதி வழங்கப்படவில்லை
5) <u>உட் செல்லும் வழி</u>
ஆடியபாதம் வீதியில் உள்ள சந்தை கடை தொகுதியூடான பிரதான வாயிலுக்கு அருகில் உள்ள மாடிப் பாதைப்படிகளை மட்டும் பயன்படுத்த வேண்டும்
<u>வெளிச் செல்லும் வழி</u>
மேற்தள பிரதான வடக்கு பக்க, கிழக்குப்பக்க, மேற்குப் பக்க பாதை இறங்கு படிகளை பயன்படுத்துக(பிரதான வாயில் ஆடியபாதம் வீதிக்கு வடக்கு புறம்)
6) வாழைக்குலை மற்றும் பழவகை மொத்த வியாபாரம் பழைய வாழைக்குலைச் சந்தை ஒதுக்கப்பட்ட இடங்களில் நடைபெறும்
7) சந்தை கீழ்தள பகுதியில் துவிச்சக்கர வண்டிபாதுகாப்பு நிலையமும் , சைவப்பாடசாலை வடக்கு புற காணியில் ஏனைய வாகன தரிப்பிற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது
சகலரும் பொலிசார் மற்றும் உத்தியோகத்தர்களிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்

**சுகாதார விடயம் தொடர்பானது**

I சந்தைக்கு உள் நுழையும் யாவரும் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்
II பிரதான வாயிலில்களில் அமைக்கப்பட்ட கைகழுவும் வசதியைப் பயன்படுத்த வேண்டும்
உள்நுழையும் தனிநபர்கள் 1m சமூக இடைவெளியைப் பேணுதல் கட்டாய மானதாகும்
III தேவையற்றவர்கள் சந்தையில் தரித்திருப்பதை தவிர்த்தல்
IV சிறுவர்கள், முதியவர்கள் சந்தைக்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ளுதல்
V கண்ட கண்ட இடங்களில் எச்சில் உமிழ்வது தடை செய்யப்பட்டுள்ளது
விழிப்புணர்வுடன் செயற்பட்டு சமூகத்தை பாதுகாக்க ஒத்துழையுங்கள்

31.05.2020

தவிசாளர்
நல்லூர் பிரதேச சபை

### நல்லூர் பிரதேச சபை
### ஒரு வழிப்பாதை தொடர்பான பொது அறிவித்தல்

கோவிட்- 19 பாதுகாப்பை கருத்திற் கொண்டு மாவட்ட மட்ட தீர்மானத்தின் அடிப்படையில் திருநெல்வேலி சந்தை பகுதி சனநெரிசலிற்குள்ளாவதை குறைக்கும் நோக்கில் திருநெல்வேலி சந்தியிலிருந்து கலாசாலை வீதி சந்திவரையான ஆடியபாதம் என்பதை இத்தால் பொது மக்களிற்கு அறியத்தருகின்றேன்.

**ஒருவழிப் பாதையாகப் பயன்படுத்த வேண்டிய நேரம்** : - வீதி காலை 6.00 மணி முதல் மதியம் 12.00 மணிவரை ஒருவழிப்பாதையாக மாற்றப்படுகின்றது

**ஒருவழிப் பாதைப் பயன்பாட்டிற்கான திசை** :- திருநெல்வேலிச் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி ஆடியபாதம் வீதி

**மாற்றுப் பாதையின் ஒழுங்கு**

.கலாசாலை வீதி சந்தி (அரசடி அம்மன் கோவிலடி) இருந்து அம்மன் வீதி, பிள்ளையார் வீதி ஊடாக பலாலி வீதியையும்,
கலாசாலை வீதி சந்தியிலிருந்து (அரசடி அம்மன் கோவிலடி) கலாசாலை வீதி ஊடாக பலாலி வீதியையும்
இராமசாமிப்பரியாரியார் சந்தியிலிருந்து வடக்கு ,தெற்கான இராசபாதை வீதியையும் பயன்படுத்த முடியும்
பொது மக்கள் இவ் அறிவுறுத்தல்களை ஏற்று ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.

31.05.2020

## Invitation for Bids (IFB) Service & Maintenance of Air Conditioning System at Teaching Hospital, Jaffna for the year 2020/2021

1. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for Service and Maintenance of Air conditioning system at Teaching Hospital – Jaffna, for a period of one (01) year
2. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
3. To be eligible for contract award the successful bidder shall meet the following requirements.
   a. The Bidder must have CIDA registration under Electrical& Mechanical Services category (EM4)
   b. Fully equipped workshop facilities must be available with the bidder. Details of the work shop such as directions, equipment available in the work shop etc. have to be mentioned.
4. Qualification requirements to qualify for contract award include.
   a. The Bidder must have CIDA registration under Electrical & Mechanical Services category (EM4 in MVAC) and at least one years of post-experience. The bidder must indicate the details of their experience mentioning the details such as name of the clients name and contact no of authorized person etc.
   b. Fully equipped workshop facilities must be available with the bidder details of the workshop such as directions, equipment available in the workshop etc have to be mentioned.
   c. The bidder must have qualified and experienced staff. Minimum one employee shall be BSc qualified engineer qualifications and experience of the staff have to be mentioned.
   d. The bidder shall not have been Black listed by Hospital or other companies previously.
5. Interested eligible bidders may obtain further information from Hospital Secretary. Teaching hospital, Jaffna (Tel: 0212227351) and inspect the bidding documents during 09.00 hrs to 15.30 hours on any working day from 02.06.2020 until 22.06.2020.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Director, Teaching Hospital, Jaffna at the above address during 09.00 am to 15.30 hours on any working day from -02/06/2020 until -22/06/2020 upon payment of a non-refundable fee of Sri Lankan Rupees Two Thousand (Rs.2, 000.00) including VAT. The method of payment will be cash.
7. Sealed bids shall be deposited with duplicate in the tender Box made available at Director, Teaching Hospital Jaffna or sent by registered post addressed to the Director, Teaching Hospital Jaffna at the above address to reach him on or before 10.00 am on -23/06/2020.Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders representatives who choose to attend at the above address.
8. Bids shall be valid up to 21.09.2020 (91 days from submission of Bids)
9. All bids shall be accompanied by a Bid security which shall be in the form included in the Bidding Document issued in favour of Director Teaching Hospital Jaffna for an amount of Sri Lankan Rupees Ten Thousand Rupees (Rs.10, 000.00) valid up to 19.10.2020 (119days from Submission of Bids) issued by a commercial bank operating in Sri Lanka approved by the central Bank of Sri Lanka as per clause 09 of instructions to Bidders.
10. The Director Teaching Hospital. Jaffna reserves the right to reject any or all Bids and the right to accept any portion of a bid, at any time prior to awarding of a contract without giving any reasons for such Clients is not bound to accept the lowest or any bids.
11. Pre-bid meeting will be held at 10.00 am on -10.06.2020 at Directors offices Teaching Hospital Jaffna.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.

29.05.2020

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 28.08.1932
உதிர்வு 01.06.2006

அமரர்
**ஸ்ரீமான். இராமசாமிபிள்ளை வைத்திலிங்கம்**
**(வல்வை சிங்கம் அண்ணா)**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்படும்"

இராமசாமிபிள்ளை வைத்திலிங்கம் (வல்வை சிங்கம் அண்ணா) அவர்கள் இறைவனடி சேர்ந்து ஆண்டுகள் பதினான்கு நிறைந்தாலும் அவரது நினைவலைகள் என்றும் எம்முள் ஓய்வதில்லை. அத்தகைய நற்பண்பும், நற்குணமும் சிறந்த சிந்தனையும், அறிவும், ஆற்றலும் அத்தனையும் வாய்க் கப்பெற்றவர். பாசத்தின் உறைவிடமாய், அன்பின் திருவுருவமாய், கருணை யின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்கள் அனைவரையும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வமே, பதினான்கு ஆண்டுகள் பல கடந்து போனாலும் எம்மை விட்டு நீங்காது உங்களின் பிரிவு.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
ஸ்ரீ இராக வேந்திராய நமோ நமஹ

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**

**மனைவி**
**மகன்மார், மகள், மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி, பூட்டன்மார், உற்றார், உறவினர்கள், ஸ்தாபன சேவையாளர்கள் சக ஊழியர்கள்.**

**இல. 169,**
**ஆட்டுப்பட்டித்தெரு,**
**கொழும்பு-13.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
13 . 07 . 1961



இறப்பு
29 . 05 . 2020

## சின்னத்தம்பி கேதீஸ்வரன்

**(வங்கியாளர், Commercial Bank, Stanly Road.)**

நெடுந்தீவினைப் பிறப்பிடமாகவும் புதிய வீதி கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி கேதீஸ்வரன் கடந்த (29.05.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மக னும், காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் இரத்தினம் தம்பதியரின் மருமகனும், விஜியகுமாரியின் (ஆசிரியர்-யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) அன்புக் கணவரும், குகேசன் (மொறட்டுவை பல்கலைக்கழகம், தகவல் தொழில்நுட்ப பீடம்), யேகிசன் (யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி 2022 A/L) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேதீஸ்வரியின் சகோதரனும், இரத்தினகுமார் (ஜேர்மனி), சிவகுமார் (லண்டன்) காலஞ்சென்ற சதீஸ்குமார் மற்றும் தினேஸ்குமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2020) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம் பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதிய வீதி, கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**075 5464 760**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரியில்
விரிவுரையாளராக
கடமையாற்றும்

திருமதி
**விநாயகமூர்த்தி**
**ஞானச்செல்வி**



அவர்களின் மறைவுக்கு எமது
விழிநீர் அஞ்சலியை தெரிவித்துக்
கொள்வதுடன், அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம்**
**தேசிய கல்வியியற் கல்லூரி**
**சமூகம்**

## கண்ணீர் அஞ்சலி

**சின்னத்தம்பி கேதீஸ்வரன்**
(வங்கியாளர், Commercial Bank)



பிறப்பு
13.07.1961

இறப்பு
29.05.2020

அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**ஜெகன் குடும்பத்தினர்,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

**ஜெகன் போட்டே**
**(நண்பன்)**

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ்
01
04
1979



கண் நெகிழ
09
06
2014

**அமரர் வயிரவநாதர் மயூரன்**
**(VM URAN Enterprise)**

ஆண்டுகள் ஆறு ஆகிவிட்டது
ஆறாத்துயரை நாங்கள் அனுபவிக்க
மீளாத்துயில் கொண்டீர்கள் அப்பா!
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்
உங்கள் ஆத்மா சாந்திக்காய்
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

என்றென்றும் ஈரவிழிகளுடன்
**மனைவி, பிள்ளைகள்.**

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31
07
1974



மறைவு
20
05
2013

**மதியாபரணம் மதிவதனம்**
(கரைத்துறைப்பற்று பிரதேச சபை)

ஆண்டு ஏழு ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்
மாறாத துயரினைத் தந்து எந்நாளுமே
மீளாத்துயில் கொண்ட - எங்கள்
அன்பு நிறைந்த அப்பாவே
எங்கள் கண்ணீர்ப் பூக்கள்
உங்கள் பாதங்களுக்கு சமர்ப்பணம்

**மனைவி, மகள்,**
**அக்கா, அத்தான், மருமக்கள்.**

## வாடகைக்கு உண்டு

யாழ் நகரில் உள்ள பல்பொருள் வாணிப நிலையத்துக்கு நிர்வாக பங்காளர்கள் தேவை. மேலும் வாணிப பொருள்கள் இருப்பில் வைப்பதற்கு கட்டடம் (ஸ்ரோர்) வாடகைக்கு உண்டு.

**கையேசி எண்: 077 7283811**

## பணியாளர் தேவை

முதியோர் இல்லத்தில் கடமை புரிவதற்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவை.

**தொடர்பு:**
**021 435 5082, 076 638 8281**

## பதவி வெற்றிடம்

மன்னாரில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவிற்கு வாகன சாரதி, விற்பனை உதவியாளர் உடன் தேவை.

**தொடர்பு:- 076 1692 517**

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு மேசன், சட்டறிங் வேலை செய்பவர், கூலியாள்கள் உடன் தேவை.

**தொடர்புகளுக்கு:**
**076 826 4859, 0777 120 945**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1976 இல் பிறந்த மக நட்சத்திரம், 9இல் சூரியன் செவ்வாய் உள்ள பட்டதாரி அரச தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த வரனை எதிர்பார்க்கின்றோம்.

**தொடர்பு:077 902 0669**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் அமைந்துள்ள ஐந்து அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு. மாதம் 18,000/= ரூபாய், இந்த வீட்டுக்கு அருகே மற்றுமொரு நான்கு அறைகள் கொணட வீடும் மாதம் 12,000/= ரூபாய்க்கும் வாடகைக்கு உள்ளன. குடும்பத்தினருக்கு மாத்திரம்.

**T.P: 077 111 9733**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**தோற்றம்**
**21.09.1945**

**மறைவு**
**02.05.2020**

கடந்த (02.05.2020) சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
**சிங்கராசா சிவராசா**
**(செல்வா ஸ்ரோர்ஸ்-உரிமையாளர்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (30.05.2020) சனிக்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.06.2020) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**41/6 A, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் துரைவீரசிங்கம்

யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பு தேவிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் துரைவீரசிங்கம் கடந்த (29.05. 2020) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம் பாக்கியம் தம்பதியரின் மருமகனும், லோகநாயகியின் அன்புக் கணவரும், கனகமணி (ஓய்வுபெற்ற அதிபர்), நடராசா (கொக்குவில்), புஷ்பராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் (ஓய்வுபெற்ற அதிபர்), குணராணி மற்றும் ரவீந்திரநாதன் (பிரான்ஸ்), வசந்தகோகிலம், வசந்திரா, விமலதேவி, மரதராணி, சரோசினி, மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், நகுலேஸ்வரன் (குமுளமுனை), குகனேஸ்வரன், ஜெகதீஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலராணி, கவிதா, மைதிலி, சுகந்தினி, திரு.திருமதி. மதனராசா ரூபகௌரி (ஆசிரியை), திரு.திருமதி. கங்கேஸ்வரன் ரூபமாலினி (அப்பன் உதிரிகள் வாணிபம் உரிமையாளர்), திரு.திருமதி. தர்மரூபன் பாலதேவி (ரூபன் பல்பொருள் வாணிபம் உரிமையாளர், ஆசிரியை), வாணி (பிரான்ஸ்), பிரபு (பிரான்ஸ்), கஜானா (பிரான்ஸ்), நக்கீரன் (பிரான்ஸ்), றமேஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தர்ஷனா, தர்மிகன், கஜேந்திரன், லிசியா, லோஜிதா, சங்கவி, சஞ்சயன், பிரியாளன், பிறைநிலவன், காலஞ்சென்ற அரவிந்தன், ருட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2020) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தேவிபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தேவிபுரம் “ஆ” பகுதி, புதுக்குடியிருப்பு.**
**076 528 1293, 076 674 1639**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**01 . 07 . 1971**



**மறைவு**
**30 . 05 . 2020**

## திருமதி ஞானச்செல்வி விநாயகமூர்த்தி

மாதகலைப் பிறப்பிடமாகவும், அல்வாய் மேற்கு திக்கம், அச்செழு, நீர்வேலி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானச்செல்வி விநாயக மூர்த்தி கடந்த (30.05.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மாதகல் கந்தஞானியார் காலஞ்சென்ற தங்கம் தம்பதியரின் மகளும், திக்கம் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை நாகபூசணியம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் (முன்னாள் அதிபர்) அன்பு மனைவியும், சனந்தன் (2ஆம் வருட மாணவன், பொறியியல் பீடம் SLTC), சிவோத்தமபூசணி (மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), வித்தியாபூசணி (மாணவி, யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பஞ்சாட்சர ஞானியார் (கனடா), Dr.இளங்கோஞானியார் (யாழ். போதனா வைத்தியசாலை), ஞானசுகந்தி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற இந்திராணி, ஸ்ரீரங்கன் (முன்னாள் பிரதி அதிபர், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), சிவலக்ஷ்மி (கனடா), செல்வராஜன் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), சுமதி (ஆசிரியர், யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை (மலேசியா), சுப்பிரமணியம் (கொழும்பு), வைத்திலிங்கம் ஆகியோரின் மருமகளும், திருமதி. தண்டிகைநாச்சியார் கந்தசுவாமி, திருமதி. வள்ளியம்மை கணபதிப்பிள்ளை, திருமதி. முத்தீஸ்வரி துரைசாமி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2020) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் **36/5A, பலாலி வீதி, விவசாயப்பண்ணை அருகில் திருநெல்வேலியில் உள்ள** இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**28.02.1957**

**மறைவு**
**31.05.2020**

## கதிரவேலு தெய்வேந்திரராஜா

**(ஓய்வுபெற்ற மின்சார சபை உத்தியோகத்தர் CRO)**

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், பன்னாலை, வவுனியா மற்றும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட க.தெய்வேந்திரராஜா நேற்று (31.05.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு பாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் ஞானதேவி ஆகியோரின் மூத்த மருமகனும் நிர்மலாவின் அன்புக் கணவரும், கரோலினி, சயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தரூபனின் பாசமிகு மாமனாரும், மகிஷனின் அன்புப் பேரனும், தவமணி, காலஞ்சென்ற சொர்ணமணி மற்றும் உருக்குமணி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் நடராசா, இராசகுமாரி, காலஞ்சென்ற தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சியாமளா (பிரான்ஸ்), சவுந்தலா (பிரான்ஸ்), மாரிமுத்து (பிரான்ஸ்), வசந்தா (கனடா), திருக்குமரன் (கனடா) ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

**ஸ்ரேசன் வீதி, மல்லாகம்.**
**077 968 5293**

# பெருந்துயர் துடைக்கும் கொடையாளர்கள்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் நடுவர்களுக்கு அல்வாய் இளம்பிறை சன சமூக நிலையத்தில் வைத்து உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. சர்வதேச கால்பந்தாட்ட நிதிப்பங்களிப்பின் மூலம் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் வழங்கிய நிதி மற்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் மேலதிக நிதியிலிருந்து 300 வீரர்களுக்கும் மற்றும் நடுவர்களுக்கும் மூன்று கட்டங்களாக பொதிகள் வழங்கப்பட்டன. (க-422)





முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 120 குடும்பங்களுக்கும், கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 130 குடும்பங்கள், கிராம சேவகர் ஊடாக தெரிவு செய்யப்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் சங்கானை மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தலா 2 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. (க-19)



முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட விநாயகபுரம், பூவரசங்குளம் பொன்னகர் மற்றும் கரும்புள்ளியன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்கு, வட்டு இந்து வாலிபர் சங்கத்தினரால் தலா ஆயிரத்து 500 பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (க)



சுசிலன் பவுன்டேசன் நிறுவனத்தினரால், கேஸ்மிதா தனது முதலாவது பிறந்த தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு கெருடமடுப் பிரதேசத்தில் 10 குடும்பங்களுக்கு 3000 ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதி மற்றும் 2000 ரூபா பணமும் வழங்கப்பட்டன. (க-222)



மட்டக்களப்பு வாகரை ஊரியன்கட்டு கிராமத்தில், FEED கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையுடன், 38 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. பட்டிமேடு சுப்பிரமணியம் சிதம்பரநாதன் அறக்கட்டளை நிதியம் வழங்கிய நிதியுதவில் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-222)



வீ3 பவுண்டேசன் அனுசரணையில் வவுனியா பொது வைத்தியசாலை காச நோய்ப் பிரிவில் சிகிச்சை பெறும் 15 நோயாளருக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-222)





கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடு வட்டார மக்களுக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் தம்பிராசா குருகுலராஜாவால் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. திருமதி லுயிசா அருளம்மா தம்பிராசா ஆகியோர்களின் ஆண்டு நினைவாக 100 பயனாளிகளுக்குப் பொதிகள் வழங்கப்பட்டன. (க-105)



சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நிவாரணப் பொருள் விநியோகச் செயற்திட்டத்தில், பண்டத்தரிப்பு சாந்தை கிராமத்தில் வசிக்கும் 150 வரையான வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.